www.padippakam.com

மே2006

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்



## இலவசங்கள்: தமிழன் கையேந்தியாவதா?

படிப்பகம்

## “தேர்தல் என்றாலே இதெல்லாம் சகஜமப்பா!...”

# பொறுக்கி அரசியலில் சி.பி.எம். இன் புதிய பரிமாணங்கள்

மக்களுக்காகப் போராடும் ஒரே கட்சி, உழைக்கும் மக்களின் கட்சி என்றெல்லாம் தங்களைத் தாங்களே பாராட்டிக் கொள்ளும் வலது கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் நல்லக்கண்ணு, ''அரசியல சாக்கடை சாக்கடைன்னு சொல்லிகிட்டு இருந்தா, அப்புறம் யார்தான் அத அள்றது? நாமதான் தோழர்களே தூர் வாரணும்! எனவே கம்யூனிஸ்டு கட்சிக்கு வாக்களிக்க வாருங்கள்!'' என்று ''ஆனந்த விகடன்'' இதழில் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த ஓட்டுப் பொறுக்கித் திருவிழாவில் அடிதடி - வெட்டு குத்து - வேட்டி கிழிப்பு, கொலை மிரட்டல், குண்டு வீச்சு, கட்சித் தாவல், ஹீரோ - ஹீரோயின் - காமெடியன்களின் கொள்கை விளக்கப் பிரச்சாரம் முதலானவற்றுக்கு மத்தியில், சாக்கடையைத் தூர்வாரி ஓட்டைப் பொறுக்க ''காம்ரேடுகள்'' என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று எட்டிப் பார்த்தோம். முடைநாற்றம் தாங்க முடியாமல் நமது மூக்கே நம்மைத் திட்டுகிற அளவுக்குக் குமட்டி விட்டது. சாக்கடையில் புரண்டு எழுந்து ''காம்ரேடுகள்'' செய்து கொண்டிருக்கும் 'புரட்சி' நம்மைப் புல்லரிக்கச் செய்து விட்டது.

சி.பி.எம். கட்சியின் மாநிலச் செயலாளரான வரதராஜன், தனது பெயர் மட்டும் வரத'ராஜா'வாக இருந்தால் போதாது; தோற்றமும் ராஜாவைப் போல் இருக்குமாறு செய்ய வேண்டும் என்று கட்சித் தொண்டர்களுக்கு ஆணையிட்டுள்ளார் போலும். திண்டுக்கல் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் தொண்டர்கள் அசத்தி விட்டார்கள். மன்னர் பரம்பரையில் வந்த வாரிசு போல ஆளுயர மலர் மாலை, மலர் கிரீடம், கிரீடத்தின் உச்சியில் கட்சியின் சின்னம் சூட்டிக் கொண்டு பல்லைக் காட்டிக் கொண்டு அவர் தரிசனம் தந்துள்ளார். கையிலே செங்கோல் மட்டும் தான் பாக்கி! அதையும் அடுத்த கூட்டங்களில் ஏந்தி நிற்பார் என்று எதிர்பார்க்கலாம்.

உலகில் எந்த நாட்டிலும் போலி சோசலிஸ்டுகள் கூட இப்படி கிரீடம் தரித்துக் கொண்டு கொண்டாடி மகிழ்வதில்லை. இதர ஓட்டுப் பொறுக்கிகளும், சங்கராச்சாரிகள் - ஆதீனங்களும், சாதி - மதவெறியர்களும், ''தாதா''க்களும் கருப்புப் பண பேர்வழிகளும்தான் இப்படி ஆளுயர மலர் மாலை, கிரீடம், பொன்னாடை, வீரவாள் அணிந்து கொண்டு, துதிபாடிகளை வைத்து பாராட்டு விழா நடத்தி வக்கிரமாக சுய இன்பம் காண்கிறார்கள் என்றால், அவர்களுக்கு எங்கள் கட்சி சற்றும் சளைத்ததல்ல என்று மார் தட்டுகிறார் சி.பி.எம். 'ராஜா'வான வரதராஜன்.

மாநிலச் செயலாளரே இப்படியென்றால், மத்தியக் கமிட்டி உறுப்பினர் இன்னும் ஒருபடி முன்னேறியிருக்க வேண்டும் அல்லவா? எனவே தான் திருவாளர் சீத்தாராம் யெச்சூரி, தேர்தல் நிதியளிப்புக் கூட்டத்தில் ரூபாய் நோட்டு மாலை அணிந்து கொண்டு, தைரியமாக போட்டோவுக்கு ''போஸ்'' கொடுத்து அசத்துகிறார். இப்போதைக்கு ரூபாய் நோட்டு மாலை; எதிர்காலத்தில் டாலர் நோட்டு மாலையாக அது மாறலாம். ரூபாயை விட டாலருக்குத்தான் மதிப்பு அதிகம் என்பது ''காம்ரேடு''களுக்குத் தெரியாதா என்ன?

மலர்கிரீடம், ரூபாய் நோட்டு மாலை... இன்னும் என்ன பாக்கியிருக்கிறது? பரிவட்டம், பூர்ணகும்ப மரியாதை, கற்பூரம் கொளுத்தி ஆரத்தி, நல்ல நேரத்தில் வேட்பு மனு தாக்கல்... அவற்றையும் செய்து விட்டால் சி.பி.எம். கட்சி உண்மையான 'மக்கள்' கட்சியாகி விடும். ஏற்கெனவே 2005-இல் நடந்த கேரள உள்ளாட்சித் தேர்தலின் போது சி.பி.எம். வேட்பாளர்கள் வாஸ்து சாஸ்த்திர முறைப்படி தமது பெயர்-ராசிக்கு ஏற்ற வண்ணத்தில் சிவகாசியில் சுவரொட்டிகளை அச்சிட்டு 'புரட்சி' செய்துள்ளார்கள். அதிருஷ்டம் கை கொடுக்கும்போது, அதையும் பயன்படுத்திக் கொள்ள தமிழக ''காம்ரேடுகள்'' வாஸ்து போஸ்டர்கள் அச்சிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்தக் கூத்துக்கள் இருந்தால் மட்டும் போதுமா? கோஷ்டிச் சண்டைகள் இருந்தால்தானே ஓட்டுக் கட்சி அரசியல் களை கட்டும்! அதிலும் நாங்கள் சளைத்தவர்கள் அல்ல என்று திருப்பரங்குன்றம் தொகுதியில் நிறுத்தப்பட்டுள்ள வேட்பாளர் வெங்கடேசனுக்கு எதிராக அதிருப்தி கோஷ்டியினர் கலகம் செய்து கொண்டிருக்

**திண்டுக்கல் பொதுக்கூட்டத்தில் மாலை-மலர்க் கிரீடம் அணிவிக்கப்பட்ட பூரிப்போடு காட்சி தரும் 'மார்க்சிஸ்டு ராஜா' என்.வரதராஜன்.**



தொடர்ச்சி 27-ஆம் பக்கம்

www.padippakam.com

**புதிய ஜனநாயகம்**

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

**தொகுதி: 21**

**இதழ் 7**

மே 2006

***உள்நாடு***
**தனி இதழ்: ரூ. 5.00**
**ஆண்டு சந்தா: ரூ. 60.00**

***வெளிநாடுகள்***
**(வான் அஞ்சலில்)**
**ஆண்டு சந்தா: US$ 10**

***படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்***

**புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.**
தொலைபேசி: 94446 32561

# "ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!"
## – ஏன் இந்த முழக்கம்?

அனல் பறக்கும் தேர்தல் பிரச்சாரத்திற்கிடையே, ''ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!'' என்று ஒரு குரல், உறுதியான குரல் ஓங்கி ஒலிக்கிறது. ஒன்றில்லாவிட்டால், மற்றொரு கட்சிக்கோ, அணிக்கோ ஓட்டுப் போடுவதற்குப் பதில் ஓட்டு மொத்தமாகத் தேர்தல்களையே புறக்கணிக்கக் கோருகிறது. ஏன் இப்படி வித்தியாசமான குரல், தனித்த குரல்? அரசியல் கட்சிகள் மீதான நம்பிக்கை இழந்து, ஆத்திரம் பொங்கி, வெறும் விரக்தியால் எழுப்பப்படும் முழக்கமா? அரசியல் கட்சிகளும் அரசும் கூறுவதைப் போல வேலையற்றவர்களின் வெறும் தீவிரவாத முழக்கமா? இல்லை, ஓட்டுக் கேட்டு வரும் அரசியல் கட்சிக்காரர்களைப் போல, ஏதாவது ஆதாயம் தேட முன்வைக்கப்படும் முழக்கமா? ''தவறாமல் ஓட்டுப் போடுங்கள்'' என்று அரசு பிரச்சாரம் செய்வதிலாவது ஒரு உள்நோக்கம் இருக்கிறது. ஒருமுறை ஓட்டுப் போட்டு விட்டால், உங்கள் சம்மதத்தோடுதான் இந்த அரசு செயல்படுகிறது என்று எதை வேண்டுமானாலும் அவர்கள் செய்து கொள்ளலாம். ''எங்களுக்கு ஓட்டுப் போடுங்கள்'' என்று அரசியல் கட்சிகள் கேட்பதிலாவது அவற்றுக்கு ஆதாயம் இருக்கிறது.

ஆனால், ''ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!'' என்ற முழக்கம் ஆழ்ந்த சிந்தனை, அறிவியல்பூர்வமான ஆய்வு அடிப்படையிலான, ஆக்கபூர்வமான அரசியல் முழக்கமாகும். ''போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணிப்போம்! புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரள்வோம்!'' என்ற அரசியல் முழக்கத்தின் சுருக்கம்தான் ''ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!'' என்ற அறைகூவல். தேர்தல்கள், தில்லுமுல்லுகளும் முறைகேடுகளும், சந்தர்ப்பவாதங்களும் மோசடிகளும், ஆடம்பர ஆபாசத்தனங்களும் ஊதாரித்தனங்களும் நிறைந்ததாகி விட்டது என்கிற காரணத்துக்காக மட்டும் அவற்றைப் புறக்கணிக்கச் சொல்லவில்லை. தற்போதைய ஆட்சி, அரசமைப்பை ஜனநாயகம் என்று சொல்வதே போலித்தனமானது; தேர்தல்கள் இந்த உண்மையை மூடி மறைப்பதற்குப் பயன்படுத்தப்படும் கவர்ச்சித் திருவிழாதான். ஜனநாயகம் - மக்களாட்சி என்று கருதக்கூடிய அளவுக்கு ஆட்சி-அரசமைப்பில் மக்களுக்கு ஏதாவது அதிகாரமோ, உரிமையோ, பங்கோ இருக்கிறதா? மனு தரலாம், வழக்குப் போடலாம், அவ்வளவுதான்!

வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் ''பிரதிநிதி''களுக்குத்தான் எந்த அளவுக்கு அதிகாரமும் உரிமையும் இருக்கிறது? உள்ளூராட்சி முதல் சட்டமன்றங்கள், நாடாளுமன்றங்கள்வரை சட்டதிட்டங்களுக்கும் வரவு செலவுகளுக்கும் கைதூக்கி ஆதரவு, மறுப்பு தெரிவிக்கலாம்; முறைகேடுகள் செய்து பொறுக்கித் தின்னலாம். மக்களுக்கு எந்த வகையிலும் கட்டுப்படாத அதிகாரவர்க்கம், போலீசு, நீதிபதிகளுக்குத்தான் எல்லா நிர்வாக அதிகாரங்களும் இருக்கின்றன. இவர்களையும் பண்ணை நில முதலைகள், தரகு அதிகார முதலாளிகள் மற்றும் பன்னாட்டுத் தொழிற்கழகங்கள், உலகவங்கி - உலக வர்த்தகக் கழகம் முதலிய ஏகாதிபத்திய நிறுவனங்கள்தாம் இயக்குகின்றன. நடப்பது இந்த ஆதிக்க - சுரண்டல்காரர்களின் சர்வாதிகாரம்தானே தவிர, உண்மையான ஜனநாயகமோ மக்களாட்சியோ அல்ல.

மின்னணு இயந்திரத்தின் பொத்தானை அழுத்திவிட்டு, மக்கள் தமது சிந்தனையையும் செயலையும் சிறைப்படுத்திக் கொண்டு, அதிகாரிகள்-அரசியல்வாதிகளின் தயவிற்காக காத்திருக்க வேண்டியதில்லை. அவற்றுக்கு மாறாக, ஒரு புதிய உண்மையான மக்கள் ஜனநாயக அரசமைப்பை உருவாக்குவது சாத்தியமானதுதான் என்று பல உலக நாடுகளின் அனுபவங்கள் காட்டியுள்ளன. ஒவ்வொரு கிராம-வட்டார அளவிலும் மக்கள் சபைகள் நிறுவப்பட்டு, அக்கிராம-வட்டார நிர்வாகிகளைத் தேர்வு செய்வதும், அவர்களே நீதி-நிர்வாகம், உடைமை-உரிமை, காவல் பணிகளை மேற்கொள்வதும் அதேபோல் நகர்ப்புறங்களில் பகுதிகள் மற்றும் தொழிலகங்கள் அடிப்படையில் மக்கள் சபைகளும் நிர்வாக அமைப்புகளும் நிறுவிக் கொள்வதும் சாத்தியமே. இவற்றைத்தான் மக்கள் சர்வாதிகார மன்றங்கள்-உண்மையான ஜனநாயக அமைப்புகள் என்று கருதமுடியும். இவற்றின் மூலம் உள்ளூர் அளவிலும் இவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட மாநில, மத்திய மன்றங்களும் நிர்வாக அமைப்புகளும் நிறுவிக் கொள்வதும் சாத்தியமே.

தேர்தல்களைப் புறக்கணித்துவிட்டு வேறு என்ன செய்வது? இன்றைய ஆட்சி, அரசமைப்பு இல்லாமல் நிர்வாகம் எப்படி நடக்கும் என்று பலரும் கேள்வி எழுப்புகின்றனர். வெறுமனே தேர்தல்களை புறக்கணிப்பது மட்டுமல்ல, தற்போதைய ஆட்சி-அரசமைப்பு, நிர்வாகம் அனைத்தையும் ஒழித்துக் கட்டிவிட்டுதான் மக்கள் சர்வாதிகார அரசமைப்புகளை நிறுவ முடியும். இதுவும் ஒரு மாபெரும் மக்கள் ஜனநாயகப் புரட்சியின் மூலமாக சாத்தியமாகும். இந்த மக்கள் சர்வாதிகார அரசமைப்பை உடனடியாக நிறுவ முடியாது என்பது உண்மைதான். என்றாலும், அதற்கான கருத்துருவாக்கம் முதற்பணி என்கிற முறையில்தான் தேர்தலைப் புறக்கணிக்கும் இயக்கத்தினூடாக மக்களை அணிதிரட்ட வேண்டியிருக்கிறது. இதற்காகத்தான் ''போலி ஜனநாயகத் தேர்தலை புறக்கணிப்போம்! புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரள்வோம்!'' என்ற முழக்கம், இயக்கம் முன்வைக்கப்படுகிறது. ●

www.padippakam.com

## இலவச கவர்ச்சித் திட்டங்கள்:

# தமிழன் கையேந்தியாவதா?

எப்படியாவது ஓட்டு வாங்கி, தேர்தல்களில் வெற்றி பெற்று பதவியைப் பிடிக்க வேண்டும்; அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்கள் அரசியல் கட்சிக்காரர்கள். வாக்காளர்களின் கால்களைப் பிடித்தும் கெஞ்சுவார்கள் - அப்படியும் செய்திருக்கிறார்கள்! ஆனால், ஒன்றை மட்டும் செய்யவே மாட்டார்கள்!

தேர்தல்களின்போது அள்ளி வீசும் வாக்குறுதிகளை, குறைந்தபட்சம் அரசியல் கட்சிகள் தமது தேர்தல் அறிக்கையில் எழுத்துபூர்வமாகத் தரும் வாக்குறுதிகளை நிறைவேற்றாவிட்டால் தண்டிக்கப்படுவார்கள்; அவர்களின் அரசியல் கட்சிகள் தடை செய்யப்படும்; குறைந்தபட்சம் அவர்களின் அங்கீகாரம் இரத்து செய்யப்படும் என்று சட்டம் கொண்டு வருவோம் என்று வாக்குறுதி - வாக்குறுதிதான் தருவார்களா? மாட்டார்கள்!

ஏனென்றால், ஓட்டுக் கட்சிகள் எல்லாவற்றுக்குமே நன்றாகவே தெரியும் - எல்லாம் ஒரு ஏமாற்று என்பது! அவர்கள் ''அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா'' என்று சொல்லும்போது போலி வாக்குறுதிகளும் அதில் அடங்கும். அவர்கள் ஓட்டுப் பொறுக்குவதற்காக எதையும் செய்வார்கள், சொல்வார்கள். செய்யாவிட்டால், யாரும் எதுவும் செய்துவிட முடியாது என்றும் தெரியும். வாக்காளர்களையும் இதற்குப் பழக்கப்படுத்தி விட்டார்கள்.

ஜனநாயக அமைப்பு முறையைப் பலப்படுத்துவது என்ற பெயரில் எவ்வளவோ சீர்திருத்தங்கள் முன்மொழியப் படுகின்றன; கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன. ஒரு சார்பாக நடந்துவிடக் கூடாது என்பதற்காகக் கண்ணில் விளக்கெண்ணெய் விட்டதைப் போலக் கண்காணித்து உத்தரவுகள் போடுகிறது, தேர்தல் ஆணையம்; புகார் மனுக்கள் குவிகின்றன, விசாரணைகள் ''தூள்'' பறக்கின்றன. வாக்காளர் பதிவுகள் - சரி பார்த்தல்கள் திரும்பத் திரும்ப நடக்கின்றன; போலி வாக்காளர்களைத் தடுப்பதற்குப் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன; அதையும் மீறுவதால் புகைப்பட வாக்காளர் பட்டியல்கள் தயாரிக்கப்படுகின்றன. வேட்பாளர் செலவுகளையும், வாக்குப்பதிவையும் கண்காணிப்பதற்கு மேற்பார்வையாளர்கள் போடப்படுகிறார்கள். கள்ள ஓட்டுக்களைத் தடுப்பதற்காக மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் வந்துவிட்டன. வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுவது, கள்ள ஓட்டுப் போடுவது, ஓட்டு எண்ணிக்கையின்போது நடக்கும் அராஜகம் எல்லாவற்றையும் கண்காணிக்க ''டிஜிட்டல் காமிரா'' மூலம் படப்பிடிப்பும் வந்துவிட்டது. கட்சித்தாவல் தடைச் சட்டம், கட்டாய உட்கட்சித் தேர்தல்கள் கூட வந்துவிட்டன.

இவை எந்தளவு ஜனநாயக அமைப்பு முறையைப் பலப்படுத்தியுள்ளன என்பது ஒருபக்கம் இருக்கட்டும். ஆனால், பெயருக்குக் கூட ஒரு விசயம் வலியுறுத்தப்படுவதில்லை. அதுதான் ''தேர்தல் வாக்குறுதிகளை அரசியல் கட்சிகள் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும்; தேர்தல்களில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தால் இந்த இந்த சட்டதிட்டங்களைத்தான் அமலாக்குவோம் என்று முன்கூட்டியே தத்தமது தேர்தல் அறிக்கையில் அறிவித்து விடவேண்டும். அவற்றை மீறினால் தண்டிக்கப்படுவார்கள், அரசியல் கட்சிகள் தடை செய்யப்படும், அங்கீகாரம் இரத்து செய்யப்படும்'' என்பதற்கு மட்டும் சட்டமோ சீர்திருத்தமோ வாக்குறுதியோ இல்லை.

''சீட்டுக் கம்பெனி'' நடத்துபவர்கள், பணம் வசூலித்துக் கொண்டு வாக்களித்தபடி பணமோ, பரிசோ தராமல் மோசடி செய்துவிட்டால் அவர்களைத் தண்டிக்க சட்டத்தில் இடமுண்டு. கம்பெனிகளுக்கிடையிலான ஒப்பந்தங்கள் மீறப்பட்டால் ஒப்பந்த மீறல், நம்பிக்கைத் துரோகம் என்று கூறி வழக்குப் போடமுடியும். இன்சூரன்சு - காப்பீட்டுக் கழகங்கள் வாக்களித்தபடி தொகை தராமல் போக முடியுமா? அதேபோல வாக்குறுதிகள் கொடுத்து ஓட்டுக்களை அள்ளிக் கொண்டு போய், அவற்றை நிறைவேற்றாமல் மோசடி செய்வது நம்பிக்கைத் துரோகம், ஒப்பந்த மீறல் குற்றம் என்று கருதப்படுவதில்லையே, ஏன்?

இதைவிட மிகப் பெரிய கிரிமினல் குற்றங்கள் புரிவதற்கு இந்த அரசியல் அமைப்பு முறை ஓட்டுப் பொறுக்கிகளுக்குச் சாதகமாக இருக்கிறது. ஒரு முறை ஓட்டுக்களை வாங்கிக் கொண்டு போய் ஆட்சியில் அமர்ந்துவிட்டால், இது இதைத்தான் செய்ய வேண்டும் என்று கட்டாயம் இல்லாததைப் போல, நாட்டுக்கும் மக்களுக்கும் எதிராக எது எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று வெற்றுத்தாளில் கையொப்பம் போட்டுக் கொடுப்பதாகத்தான் இருக்கிறது.

+2 மாணவிகளுக்கு ''இலவச'' மிதிவண்டி வழங்குவதைத் தொடங்கி வைக்கும் ஜெயா: தேர்தலைக் குறிவைத்து வீசப்பட்ட தூண்டில்.






தேர்தல்களின் போது கொடுக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றாத அதே சமயம், 2001-இல்'' ஆட்சிக்கு வந்ததும் ஜெயலலிதா அரசு ஒரே சமயத்தில் நாலாயிரம் கோடிக்கு மேல் மின்சாரம், பேருந்துக்கட்டணம், வரிச்சுமைகள் போன்றவற்றை ஏற்றியது. மாணவர்களைக் கொள்ளையடிக்கவும், அரசு ஊழியர்கள் உரிமைகளைப் பறிக்கவும், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதை இரத்து செய்யவும், ரேசன் விலையேற்றம், போராடிய அரசு ஊழியர்கள், பேருந்துத் தொழிலாளர்கள், மாணவர்களை ஒடுக்கவும், அரசு ஊழியர்கள், சாலைப் பணியாளர்களை வேலை நீக்கம் செய்யவும், ஆடு-கோழி வெட்டத் தடை, மதமாற்றத் தடை, பொடா சட்டம் என்று ஒடுக்கு முறைகளை ஏவி ஒடுக்கவும் செய்தார்.

மத்தியில் காங்கிரசு கூட்டணி அரசாக இருந்தாலும் பா.ஜ.க. கூட்டணி அரசாக இருந்தாலும் தவறாமல் தனியார்மயம் - தாராளமயம் - உலகமயக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. அரசுத் துறைத் தொழில்கள் உள்நாட்டு-வெளிநாட்டு ஏகபோக முதலாளிகளுக்குத் தாரை வார்க்கப்படுகின்றன. நாட்டையும் மக்களையும் பாதிக்கும் வகையில் அந்நியத் தொழில் கழகங்களுக்கு எல்லாத் தொழில்களும் திறந்து விடப்படுகின்றன நாடாளுமன்றத்துக்குத் தெரியாமலேயே இராணுவ, அணுசக்தி, விவசாய - தொழில் ஒப்பந்தங்கள் போடப்படுகின்றன. இப்படித்தான் செய்வோம் என்று தேர்தல் அறிக்கைகளில் பகிரங்கமாக அறிவிக்காமலேயே வெற்றுத்தாளில் கையெழுத்து வாங்குவதைப் போல வாக்குகளை வாங்கிப் போகிறார்கள்.

தற்போது தொகுதி நிலவரம் - வெற்றிவாய்ப்புகள் குறித்த மதிப்பீடுகளை எழுதும் ''கிசுகிசு'' பத்திரிக்கைகள் கூடச் சொல்லுகின்றன. ஒவ்வொரு எம்.எல்.ஏ.வும் உள்ளூரளவில் நிறைவேற்றுவதாக கடந்த தேர்தல்களில் கொடுத்த வாக்குறுதிகளுள் நான்கில் ஒன்றைத்தான் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதுவும் பெரும்பாலும் தார்ச்சாலைகள் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன என்பதுதான்! மீதி ''அம்போ'' தான்! 2001 தேர்தல்களில் ஆட்சிக்கு வருவதற்காக ஜெயலலிதா கொடுத்த வாக்குறுதிகள் நீர்மேல் எழுத்தாகி விட்டதாக ஜெயலலிதா ஆதரவு ஏடான ''இந்தியா டுடே'' மதிப்பீடு சொல்கிறது.

தேர்தல் வாக்குறுதிகள் என்பவை வெற்றுக் கோஷங்கள் என்பதை மக்கள் கண்டு கொண்டும், அரசியல் கட்சிகளின் நம்பகத் தன்மை பறிபோயும் ஆண்டுகள் பலவாகி விட்டன. அரிசியே அரசியலாவதும், சாதியை வைத்து ஓட்டுப் பொறுக்குவதும் கூட தமிழக மக்களுக்குப் புதிதல்ல. இந்தத் தேர்தலில் முதன்முறையாக ஓட்டுப் போடப்போகும் இளைஞர்கள் தங்கள் பெற்றோரைக் கேட்டுப் பார்த்தால் அவர்கள் சொல்வார்கள். அவர்கள் முதன்முறையாக ஓட்டுப் போட்ட போதே தேர்தல் முடிவுகளைத் தீர்மானிப்பதில் முக்கியப் பங்காற்றியது அரசியல் அல்ல; ''அரிசியியல்தான்.'' அதற்கு முன்பு வரை சாதியமும் பண்ணை அரசியலும்தான் ஆதிக்கம் வகித்து வந்தன. தேசியத் தலைவர் என்று பொய்யுரைத்துப் புகழப்படும் ''பெருந்தலைவர்'' காமராசரே, தன் பெயரை ''கு.காமராஜ் நாடார்'' என்று சொல்லித்தான் ஓட்டுக் கேட்டார். திராவிடப் பேரறிஞர் என்று கழகங்கள் பெருமை பாராட்டும் அண்ணாவே ''சி.என். அண்ணாதுரை முதலியார்'' என்ற பெயரில்தான் 1957-இல் காஞ்சிபுரம் தொகுதியில் போட்டியிட்டார்.

வாரம் ஒருநாள் உண்ணாவிரதம் இருக்கும்படி உபதேசித்த காங்கிரசு அரசு, ரேசனில் தலைக்கு ஒரு ''அவுன்சு'' (தலைக்கு நூறு மில்லி அளவு) அரிசி போட்டது. அந்தச் சமயத்தில் அரிசியியலின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்ட அண்ணா தலைமையிலான ''ஒரிஜினல்'' தி.மு.க, ஒரு ரூபாய்க்கு மூன்று படி அரிசி தரப்போவதாகவும் கடல் பாசியிலிருந்து அல்வா தயாரித்துத் தரப்போவதாகவும் தேர்தல் வாக்குறுதி கொடுத்தது. ரூபாய்க்கு மூன்று படி அரிசி போடாவிட்டால் முச்சந்தியில் நிறுத்தி வைத்துச் சவுக்கால் அடியுங்கள் என்று வீராவேசம் பேசினார் ''பேரறிஞர்''. பிறகு அவரே சுருதியை இறக்கிக் கொண்டு, ''மூன்றுபடி இலட்சியம்; ஒரு படி நிச்சயம்'' என்று அடுக்குமொழியில் வசனம் பேசினார்.

அதையும் நம்பி 1967 தேர்தல்களில் தி.மு.க.வை வெற்றிபெறச் செய்து, ''அண்ணா''வை முதலமைச்சராக்கினார்கள் தமிழக வாக்காளர்கள் (''இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி'' என்று வாக்குறுதி கொடுத்து ஆந்திராவில் ஆட்சியைப் பிடித்த என்.டி. இராமராவுக்கு ''அண்ணா'' என்று பட்டப் பெயர் உண்டு) பதவியேற்ற அண்ணா வாக்குறுதியை மறந்துவிடவே, எதிர்க்கட்சிகள் வலியுறுத்திய பிறகு சென்னையிலும், கோவையிலும் மட்டும் ''படியரிசித்திட்டம்'' அமுலாக்கப்பட்டது. சில மாதங்களுக்குப் பிறகு நிதிப் பற்றாக்குறையைக் காரணங் காட்டி அத்திட்டமும் கைவிடப்பட்டது.

இன்று அண்ணாவின் அரசியல் வாரிசு என்று உரிமை பாராட்டும் கருணாநிதியும், அண்ணாவைக் கொடியில் பொறித்துக் கொண்டு அண்ணா பெயரில் கட்சி நடத்தி வரும் ஜெயலலிதாவும் போட்டிப் போட்டுக் கொண்டு அரிசியியல் நடத்துகிறார்கள். விவசாயிகள் எலிக்கறியையும், நெசவாளிகள் கஞ்சித் தொட்டியையும் தேடிப் போகும் இன்றைய நிலையில் மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு ஒரே வழி - சுனாமி நிவாரணம், வெள்ள நிவாரணம், மகளிர் சுயஉதவிக் குழு, இலவச சைக்கிள், விவசாயிகள் நலத்திட்டம் என்றெல்லாம் ஆயிரம், ஐந்நூறு ரூபாய் நோட்டுக்களை விசிறியடிக்கும் ஜெயலலிதாவை முறியடிப்பதற்கான ஒரே வழி - அரசியல் அல்ல, அரிசியியல்தான் என்று முடிவு செய்த கருணாநிதி,

www.padippakam.com

இலவச கலர் டி.வி. பெட்டி, இலவச எரிவாயு அடுப்பு, ஏழைப் பெண்களின் திருமணச் செலவுக்கும், பிரசவத்துக்கு முன்னும் பின்னும் ஆயிரக்கணக்கில் நிதி உதவி, விவசாயிகளுக்குக் கடன் ரத்து, விவசாயிகளுக்கும் விசைத்தறி முதலாளிகளுக்கும் இலவச மின்சாரம், வேலையற்ற இளைஞர்களுக்கு மாத ஊதியம் ஆகியவற்றோடு, அவற்றை விட முக்கியமாக, இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ தரமான அரிசி வழங்கும் திட்டத்தைத் தேர்தல் வாக்குறுதியாக அறிவித்தார். இதைப்பார்த்த நடிகர் விஜயகாந்த் மாதம் இருபது கிலோ இலவச அரிசி என்று அறிவித்தார்.

இந்த அறிவிப்புகளுக்கு முன்பு வரை, ஜெயலலிதா அளித்த ரொக்கம் - இலவசங்கள் ஆகியவையே தேர்தல் பிரச்சாரங்களில் முக்கியப் பேச்சாக இருந்தன. கருணாநிதியின் இலவச அறிவிப்புகளுக்குப் பிறகு தேர்தல் பேச்சே மாறிப் போய்விட்டது. இதெல்லாம் சாத்தியமே இல்லை என்ற ஜெயலலிதா அணி அதிர்ச்சியுற்று, தானும் மாதம் பத்து கிலோ அரிசி இலவசமாகத் தரும் வாக்குறுதியை அறிவித்தார். யாருடைய அறிவிப்பு மேலானது, நம்பத்தகுந்தது என்ற இலாவணிதான் இப்போது முக்கியமாகி விட்டது.

மூன்று வருடங்களுக்கு முன்புதான் ''கஜானா காலி'' என்று அறிவித்து பல ஆயிரங்கோடி வரி-கட்டணச் சுமைகளை ஏற்றிய ஜெயலலிதா, இதுவரை அமலாக்கிய நிவாரண - இலவசத் திட்டங்களுக்கே நிதியளித்தது மத்திய அரசுதான் என்று தி.மு.க. அணி உரிமை பாராட்டிக் கொள்கிறது; நேற்று வரை கருணாநிதியின் அரிசி-இலவசத் திட்டங்களைக் கேலி செய்த ஜெயலலிதா, தானே அரிசி - இலவச அறிவிப்புகள் தருவது மோசடிதான் என்கிறது தி.மு.க. அரிசி உட்பட மக்களின் அடிப்படை தேவைகளுக்கான, விவசாயம் -நெசவு போன்ற தொழில்களுக்கான, மருத்துவம் - கல்வி, சுகாதாரம் போன்ற வற்றுக்கான மானியங்களைக் கடுமையாக வெட்டும் மத்திய காங்கிரசு அரசோடு சேர்ந்துள்ள கருணாநிதி பல ஆயிரம் கோடி ரூபாய் செலவு பிடிக்கும் இலவசத் திட்டங்களை அறிவித்திருப்பதும் மோசடிதான் என்கிறது, ஜெயா - வைகோ - திருமா அணி.

கருணாநிதியோ, ஜெயலலிதாவோ, விஜயகாந்தோ அறிவித்துள்ள இலவச வாக்குறுதிகள் தேர்தல்கால பித்தலாட்டங்கள்தாம் என்பதில் சந்தேகமில்லை. இவர்களில் யார் ஆட்சிக்கு வந்தாலும், சில இலவசத் திட்டங்கள், சில காலம் மட்டுமே அமலுக்கு வரும். அவையும் ஏதாவது காரணங்காட்டி கிடப்பில் போடப்படும் என்பதில் சந்தேகமில்லை. ''சந்தர்ப்பவாத தேர்தல் கூட்டுகள்'', ''அரசியலில் நிரந்தரப் பகையும் கிடையாது, நட்பும் கிடையாது'' என்பவைபோல, ஓட்டுப் பொறுக்குவதற்காக எதையும் பேசலாம், செய்யலாம் என்பதும் வழக்கமாகிவிட்டது; தேர்தல் கால வாக்குறுதிகளை ''சீரியசாக'' எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதும் விதியாகி விட்டது. ''சினிமாக் கதையில் தர்க்கம் பார்க்கக் கூடாது; எல்லாம் ஒரு பொழுது போக்கு, என்று பேசப்படுவதைப் போல தேர்தல் வெறும் கேலிக் கூத்தாக் கப்படுகிறது.

ஆனாலும், 'சோ', ரஜினி, ஞாநி போன்ற தேசியவாதிகள் - அறிவாளிகள் மட்டும் இத்தகைய இலவச அரசியல் என்பதே திராவிடக் கட்சிகளின் கவர்ச்சி அரசியலால் வந்தது என்றும், நீண்டகால தொழில் வளர்ச்சி, பொருளாதார முன்னேற்றம் என்ற சிந்தனையற்ற கீழ்த்தரமான, சுயநல அரசியல்வாதிகளால் வந்தது என்றும் உபதேசிக்கிறார்கள். தமிழகத்தில் 'அவுன்சு' அரிசித் திட்டம் ''பெருந்தலைவர் - தியாகச் செம்மல்'' ஆட்சிக் காலத்தில் தான் வந்தது. நிரந்தரமான பஞ்சபூமியான ஒரிசா, பீகார், மத்தியப்பிரதேசத்தில் மட்டுமல்ல, வேகமான தொழில் வளர்ச்சி காணும் ஆந்திரா, கர்நாடகாவிலும், தமிழகத்தை விட மிகவும் முன்னேறிய மராட்டியத்திலும் கூட தேசியக் கட்சிகளின் ஆட்சிக் காலத்திலே தான் பட்டினிச் சாவுகளும், விவசாயிகள் தற்கொலைகளும் நடக்கின்றன.



கட்சி தொடங்குவதற்கு முன்பே, தனது இமேஜை வளர்த்துக் கொள்ள 'இலவசங்களை' வாரி வழங்கி வந்த 'வள்ளல்' விஜயகாந்த்.

எல்லாம் எதனால்? 1947-க்குப் பிறகு நிலவுடைமை பண்ணை ஆதிக்கம், தரகு முதலாளிகள் - ஏகாதிபத்திய கொள்ளை நீடித்தது; கடந்த 15 ஆண்டுகளாக தனியார் மயம் - தாராள மயம் - உலகமயம், பொருளாதார சீர்திருத்தம், நவீனமயம் என்ற பெயரால் உலகவங்கி, உலக வர்த்தகக் கழகம் - பன்னாட்டு தொழில் கழகங்கள் திணிக்கும் வளர்ச்சித் திட்டங்கள் அமலில் உள்ளன. புதிய பொருளாதாரக் கொள்கை - சீர்திருத்தங்களின் பலன்கள் கசிந்து அடித்தட்டு மக்களின் வாழ்வை மேம்படுத்திவிடும் என்ற வாக்குறுதி பொய்த்துப் போனது. வறுமையும், பட்டினிச் சாவும், தற்கொலையுமே மிஞ்சியது. உழைக்கும் மக்கள் அடியோடு மாண்டு போனால் மலிவான உழைப்புக்கு பன்னாட்டு முதலாளிகள் எங்கே போவது? அல்லது அவர்கள் பொங்கி எழுந்தால் பன்னாட்டு முதலாளிகள் சுரண்டலும் ஆதிக்கமும் என்ன ஆவது? இலவசங்கள் மூலம் உழைக்கும் மக்களை மயக்கி வைப்பது தான் அவர்களின் நலனுக்கு உகந்தது. அதைத்தான் மு.க.வும், ஜெயாவும், கேப்டனும் செய்கிறார்கள்.

• ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

## கோக் எதிர்ப்புப் போராட்டக் குழு உதயம்

# பாதை நெடியதானாலும் பயணம் தொடர்கிறது!

"தாமிரவருணி எங்கள் ஆறு! அமெரிக்க 'கோக்'கே வெளியேறு! தாமிரவருணியை உறிஞ்சவரும் அமெரிக்க 'கோக்'கை அடித்து விரட்டுவோம்!'' - என்ற முழக்கத்தின் கீழ் நெல்லை கங்கைகொண்டானில் மக்கள் கலை இலக்கியக் கழகமும் அதன் தோழமை அமைப்புகளும் இணைந்து நடத்திய போராட்டம், ஒரு மக்கள் போராட்டமாக உரு வெடுத்து வருகிறது.

கடந்த ஆண்டு செப்.12 அன்று இப்புரட்சிகர அமைப்பு கள் அமெரிக்க கோக்கிற்கு எதிராக நடத்திய பேரணி, ஆர்ப் பாட்டம், மறியல் போராட்டத்தைத் தொடர்ந்து நெல்லை - தூத்துக்குடி மாவட்டங்களில் கிராமங்கள்தோறும் பிரச்சாரம், அதைத் தொடர்ந்து கடந்த பிப்ரவரியில் நெல்லை-தாழையூத் தில் கோக் எதிர்ப்பு - தண்ணீர் தனியார்மய எதிர்ப்பு கருத்தரங் கம் மற்றும் ஓவியக் கண்காட்சியையும் நடத்தின. அதன்பிறகு கடந்த ஏப்ரல் 12, 13, 14 தேதிகளில் மூன்று உட்புற கிராமங்க ளில் இத்தகைய கருத்தரங்குகள் நடத்தத் தீர்மானித்து ஏற்பாடு கள் தொடங்கியதும், அனைவரையும் கைது செய்யப் போவ தாக கோக்கின் அடியாளாகச் செயல்படும் நெல்லை போலீசு அச்சுறுத்தியது. அதையும் மீறி 250 பெண்கள் உள்ளிட்ட 400 பேர் 12-ஆம் தேதியன்று நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்று ஆதரித்தனர். பீதியடைந்த போலீசு ஊர் நாட்டாமை களை மிரட்டி, 13-14 தேதிகளில் நடைபெறவிருந்த கருத்த ரங்குகளைத் தடுத்துள்ளது. ஆனாலும், புரட்சிகர அமைப்புக ளின் தொடர்ச்சியான பிரச்சார இயக்கத்தால், கோக் எதிர்ப்பு ணர்வு மக்களின் நெஞ்சில் ஆழமாக வேரூன்றியுள்ளது.

மறுபுறம், நெல்லை கங்கை கொண்டானில் கோக் ஆலை யில் உற்பத்தி தொடங்கப்பட்டு, ''மாஸா ஸ்பிரைட்'' எனும் குளிர்பானம் தயாரிக்கப்படுகிறது. கோக் ஆலையில் உள்ளூர் காரர்கள் எவருக்கும் வேலை தரப்படவில்லை. சுற்றுப்புறக் கிராமங்களைச் சேர்ந்த ஒரு சிலருக்கே, தற்காலிக வேலை கிடைத்துள்ளது. அதுவும் பாட்டில் கழுவுவது, புல் வெட்டு வது, கழிவுகளை அள்ளுவது முதலான வேலைகள்தான். இந்த வேலையைச் செய்பவர்கள் கைநாட்டுப் பேர்வழிகள் அல்ல; படித்த பட்டதாரிகள்! இந்தக் கேவலத்தைத்தான் கோக் விசுவாசிகள், வேலை வாய்ப்பு பெரு கும் என்று மாய்மாலம் செய்கின்றனர்.

கோக் எதிர்ப்பு சவடால் அடித்துவந்த போலி கம்யூனிஸ்டு களும் தன்னார்வக் குழுக்களும் பெயருக்கு எதிர்ப்பு தெரிவித்து விட்டு அடங்கிப் போய் விட்ட நிலையில், புரட்சி கர அமைப்புகள் மட் டுமே தொடர்ந்து மக்கள் மத்தியில் பணியாற்றி வருகின்றன. கிராமப்புறங்களில் இந்தப் பணி நடைபெற்று வருகின்ற அதேவேளையில், மாநிலம் தழுவிய அளவில் கோக் எதிர்ப்பாளர்களை ஓரணியில் திரட்டும் நோக்கத்துடன் இப்புரட்சிகர அமைப்புகளின் ஆதரவுடன் **''கோக் எதிர்ப்புப் போராட்டக் குழு''** உருவாக்கப்பட்டுள்ளது.

நெல்லை வழக்குரைஞர் சங்கத் தலைவர் திரு. தங்கசாமி அவர்களைத் தலைவராகவும், புதிய ஜனநாயகத் தொழி லாளர் முன்னணியின் தலைவர் தோழர் முகுந்தனை ஒருங்கி ணைப்பாளராகவும் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இக்குழு வில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவையின் நெல்லை மாவட்டத் தலைவர் திரு. க.முருகேசன், மனித உரி மைப் பாதுகாப்பு மையத்தின் வழக்குரைஞர் தோழர் இராமச் சந்திரன், மானூர் ஒன்றிய கவுன்சிலர் திரு. சி.எஸ்.மணி மற்றும் கோக் எதிர்ப்பு கிராமக் கமிட்டி ஒருங்கிணைப்பாளர் தோழர் கல்யாணசுந்தரம் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர். மாநிலம் முழுவதுமுள்ள கோக் எதிர்ப்பாளர் களையும் பல்வேறு ஜனநாயக சக்திகளையும் ஒருங்கி ணைத்துப் போராட்டத்தை விரிவாக்க இக்குழுவினர் திட்ட மிட்டுள்ளனர்.

கோக் ஆலையிலிருந்து கழிவுநீர் எவ்வாறு வெளியேற்றப் படுகிறது. அதில் என்னென்ன வேதிப் பொருட்கள் கலந் துள்ளன. அவற்றால் எவ்வகையான பாதிப்புகள் ஏற்படும், தாமிரவருணி ஆற்றுநீர் எவ்வளவு லிட்டர் கோக்கினால் உறிஞ்சப்படுகிறது. இவற்றை யார் கண்காணிக்கிறார்கள் முத லான விவரங்களை மாவட்ட நிர்வாகம் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்; மேலும், கோக் ஆலையின் அன்றாட நடவடிக்கைகளைக் கண்காணிக்க சுற்றுப்புற கிராமத் தலை வர்கள், அறிஞர்கள், மருத்துவர்கள், ஆராய்ச்சியாளர்கள், பத்திரிகையாளர்கள், சமூக-ஆர்வலர்களைக் கொண்ட கண் காணிப்புக் குழுவை நிறுவ வேண்டும் என்றும் பத்திரிகையா ளர் சந்திப்பில் இப்போராட்டக் குழுவினர் கோரியுள்ளனர்.

கேவலம் ஒரு அமெரிக்க சோடா கம்பெனிக்காக இறை யாண்மையை இழக்கின்ற மாநில அரசையும் நெல்லை மாவட்ட நிர்வாகத்தையும் கோக் அடியாளாகச் செயல்படும் போலீசையும் மக்கள் மத்தியில் அம்பலப் படுத்தி, தாமிரவருணி யைப் பாதுகாக்கவும் கோக்கை விரட்டி யடிக்க நெல்லை மக்களை அணி திரட்டிப் போராடவும் கோக் எதிர்ப்புப் போராட்டக்குழு உறுதி யேற்று, அடுத்த கட்ட போராட்டங்களுக்கு ஆயத்தமாகி வரு கிறது.

**திருநெல்வேலியில் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பில் 'கோக் எதிர்ப்பு போராட்டக் குழு'வின் நோக்கங்களை விளக்கும் (இடமிருந்து) ஒருங்கிணைப்பாளர் அ.முகுந்தன்; தலைவர் இரா.சி.தங்கசாமி; உறுப்பினர் ராமச்சந்திரன்.**



– பு.ஜ. செய்தியாளர்கள்

www.padippakam.com

## நேபாளத்தில் மக்கள் யுத்தம்

# ஓட்டுக் கட்சிகளின் சந்தர்ப்பவாத சமரசம்

"வெற்றி! மகத்தான வெற்றி! நேற்றுவரை மன்னரின் தயவில் மக்கள்; இன்று எங்கள் தயவில்தான் மன்னர்!'' என்று எக்காளமிட்டு நேபாளத் தலைநகர் காத்மண்டுவிலுள்ள நாராயணன் ஹிதி அரண்மனை வாயிலருகே தர்பார் சதுக்கத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு போராட்ட வெற்றியை குதூகலத்துடன் கொண்டாடினர். ''இனி இந்த அரண்மனை மன்னரது சொர்க்கபுரி அல்ல; இதை மக்கள் மன்றம் என்று அறிவிப்போம்! இந்த அரண்மனையில் நாங்கள் பதவியேற்பு விழா நடத்துவோம்! மக்கள் குடியரசு நீடூழி வாழ்க என்று முழங்குவோம்!'' என்று ஆர்ப்பரித்தனர் இளைஞர்கள்.

கடந்த ஏப்ரல் 25-ஆம் தேதியன்று அரண்மனை நெடுஞ்சாலையில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் குவிந்தனர். புத்தாடை அணிந்து குழந்தைகளுடன் குடும்பம் குடும்பமாகத் திரண்டு ஜனநாயகத்துக்கான போராட்டத்தில் தாங்கள் அடைந்த முதற்கட்ட வெற்றியைத் திருவிழாவைப் போலக் கொண்டாடினர்.

ஏறத்தாழ இரண்டேகால் கோடி மக்கள் தொகை கொண்ட சின்னஞ்சிறு ஏழை நாடான நேபாளத்தில் அண்மையில் நடந்த மக்கள் திரள் எழுச்சியானது, அந்நாட்டின் வரலாற்றில் புரட்சிகரமான திருப்புமுனையாக அமைந்துள்ளது. 1950-இல் ஆட்சிக்கு வந்த அன்றைய நேபாள மன்னர், அரசியல் நிர்ணய சபையை நிறுவி மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்கப் போவதாக வாக்குறுதி அளித்து ஏய்த்தார். 1990 வரை பல வகையான மோசடிகள் - பித்தலாட்டங்கள், அடக்குமுறைகள் மூலம் நேபாளத்தின் நிலப்பிரபுத்துவ பிற்போக்கு சக்திகள் மன்னராட்சியைத் தக்க வைத்துக் கொண்டன. 1990-களில் ஜனநாயகத்துக்கான மக்கள் இயக்கம் வெடித்தெழுந்தபோது, சில சில்லரை சீர்திருத்தங்கள் வழங்கப்பட்டனவே தவிர, அரசியல் நிர்ணயசபை தேர்ந்தெடுக்கப்படவில்லை. பெயரளவிலான நாடாளுமன்றமும், நாடாளுமன்றத்தை விஞ்சிய வரம்பற்ற அதிகாரத்தை மன்னருக்கு வழங்குவதாகவே நேபாள அரசியல் சட்டம் அமைந்திருந்தது.

மன்னராட்சிக் கொடுங்கோன்மையும் நேபாள அரசியல் கட்சிகளின் துரோகமும் சமரசமும் தொடர்ந்த நிலையில் 1996-இல் கம்யூனிசப் புரட்சியாளர்களான மாவோயிஸ்டுகள் மன்னராட்சிக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தை அறிவித்தனர். மாவோயிஸ்டுகள் போராட்டம் காட்டுத் தீயாகப் பற்றிப் படர்ந்து முன்னேறத் தொடங்கியதும், மாவோயிஸ்டுகளை ஒடுக்கத் தவறிவிட்டதாகக் குற்றம்சாட்டி 2002-இல் நாடாளுமன்றத்தைக் கலைத்து வரம்பற்ற அதிகாரத்தைக் கையிலேந்தி இராணுவ ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டது மன்னர் ஞானேந்திரா கும்பல். அடுத்தடுத்து நான்கு பிரதமர்கள் பதவியிலிருந்து விரட்டப்பட்டு, நாடாளுமன்றம் கேலிக் கூத்தாகியது.

மன்னராட்சிக் கொடுங்கோன்மைக்கு எதிரான மாவோயிஸ்டுகளின் போராட்டம் விரிவடைந்து, ஆகப் பெரும்பான்மையான பகுதிகள் அவர்களின் செல்வாக்கின் கீழ் வந்தன. கம்யூனிச அபாயத்தை முறியடிக்க அமெரிக்காவும் இந்தியாவும் ஆயுத உதவி - பயிற்சிகள் கொடுத்து மன்னராட்சியை முட்டுக் கொடுத்து ஆதரித்தன. ஆனாலும், இற்று விழுந்து கொண்டிருக்கும் மன்னராட்சியை தூக்கி நிறுத்த முடியவில்லை. உள்நாட்டுப் போருக்கான அபாயம் நிலவுவதாகக் கூறி, இன்னும் 3 ஆண்டுகளுக்கு மன்னராட்சி அமல் செய்யப்படுவதாக அறிவித்து, அரசியல் கட்சித் தலைவர்களைக் கைது செய்து, தொலைபேசி - இணையத் தொடர்புகளைத் துண்டித்து, பத்திரிகைகள் - வானொலி - தொலைக்காட்சிகளை இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து, இராணுவ-முடியாட்சிக் கொடுங்கோன்மையைக் கட்டவிழ்த்து விட்டது ஞானேந்திரா கும்பல்.

அதற்குப் பிறகும் மாவோயிஸ்டுகளால் தொடங்கி வைக்கப்பட்ட புரட்சியைத் தடுக்க முடியவில்லை. மாவோயிஸ்டுகளின் நியாயமான போராட்டத்தை ஆதரித்து நாடாளுமன்றக் கட்சிகளின் அணிகளே தமது தலைமையை நிர்பந்திக்கத் தொடங்கியதும், வேறு வழியின்றி ஏழு நாடாளுமன்றக் கட்சிகள் இணைந்து மன்னராட்சிக் கொடுங்கோன்மையை வீழ்த்த, கடந்த ஆண்டு நவம்பரில் மாவோயிஸ்டுகளுடன் ஐக்கிய முன்னணியைக் கட்டியமைத்தன. மன்னராட்சியை வீழ்த்துவது, புதிய அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் நடத்தி ஜனநாயகத்தை நிலைநாட்டுவது என்ற மையமான கோரிக்கைகளுடன் முன்னேறிய போராட்டம், கடந்த ஏப்ரல் முதலாக நாடு தழுவிய மக்கள் பேரெழுச்சியாக வெடித்தெழுந்தது.

மக்கள் போராட்டங்கள் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியதும், அது நாடு முழுவதும் காட்டுத் தீயாகப் பரவத் தொடங்கியதும், அடக்குமுறைகளைத் துச்சமாக மதித்து அது தீர்மானகரமான முடிவோடு முன்னேறத் தொடங்கியதும், வேறு வழியின்றி கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டு வருவதாகவும், சிறையிடப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்களை விடுதலை செய்வதாகவும் மன்னர் அறிவித்துள்ளார். மன்னராட்சிக்கு எதிராகப் போராடி வரும் ஏழு கட்சிகளின் கூட்டணி இதை வரவேற்று, போராட்டங்களை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாகவும், நேபாள காங்கிரசுக் கட்சியின் மூத்த தலைவரான கொய்ராலாவை ஏகமனதாக பிரதமராகத் தேர்வு செய்துள்ளதாகவும் அறிவித்துள்ளன.

ஆனால் கம்யூனிசப் புரட்சியாளர்களான மாவோயிஸ்டுகள், அதிகாரமில்லாத நாடாளுமன்றம் மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படுவதை நிராகரிப்பதாக அறிவித்து, மக்கள் இயக்கத்துக்குத் துரோகமிழைத்து மன்னராட்சியின் சதிவலையில் ஏழு கட்சிகளின் கூட்டணி வீழ்ந்துவிட்டதாகக் குற்றம் சாட்டியுள்ளனர். தம்மைக் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக இக்கூட்டணி, மன்னரது முடிவை ஆதரிப்பதானது, ஐக்கிய முன்னணியின் ஒப்பந்தத்தை மீறுவதாகும் என்றும், அரசியல் நிர்ணய சபைக்கான நிபந்தனையற்ற தேர்தல் அறிவிக்கப்படும்வரை தமது போராட்டம் தொடரும் என்றும் அறிவித்துள்ளனர்.

நாடாளுமன்றத்தை மீண்டும் உயிர்ப்பிப்பதன் மூலம் மக்கள் எழுச்சியைச் சாந்தப்படுத்தி, ஏழு கட்சி கூட்டணியை நைச்சியமாக விலைபேசி, மாவோயிஸ்டுகளுக்கும் இக்கூட்டணிக் கட்சிகளுக்குமிடையிலான ஐக்கிய முன்னணியைத் தகர்த்து, இற்று விழுந்து கொண்டிருக்கும் மன்னராட்சி


படிப்பகம்

www.padippakam.com

யைத் தக்க வைக்கலாம் என்பது மன்னர் ஞானேந்திரா போடும் கணக்கு. சட்டவாத மன்னராட்சி, அதிகாரமில்லாத நாடாளுமன்றம் என்கிற இரட்டை குதிரைகளில் நேபாளம் பயணம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறது இந்தியா. எனவேதான், மன்னரது இராணுவம் போராடும் மக்களைச் சுட்டுக் கொண்டிருக்கும்போது, தனது பொருள் பொதிந்த மவுனத்தின் மூலம் மன்னராட்சிக்கு முட்டுக் கொடுத்து ஆதரித்து வந்த இந்தியா, இப்போது காற்று திசை மாறி வீசத் தொடங்கியதும், நேபாள மக்களின் போராட்டத்தை உச்சிமுகர்ந்து, நாடாளுமன்றம் மீண்டும் நடைமுறைக்கு வருவதை ஆதரித்து 'ஜனநாயக' நாடகமாடுகிறது. அதேநேரத்தில், அரசியல் நிர்ணய சபை நிறுவுவதைப் பற்றி வாய்திறக்க மறுக்கிறது.

ஈராக்கை ஆக்கிரமித்து நரவேட்டையாடிவரும் அமெரிக்கா, கௌரவப் பதவியுடன் மன்னரை ஒதுங்கிக் கொள்ளுமாறும் பல கட்சி நாடாளுமன்ற ஜனநாயகத்தை நிறுவுமாறும் உபதேசித்து ஜனநாயக அரிதாரம் பூசிக் கொள்கிறது. அண்டை நாடான சீனா, அமைதியையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்ட மன்னர் ஞானேந்திரா எடுத்துள்ள நேர்மறையான முயற்சியை வரவேற்கிறது.



ஊரடங்கு உத்தரவையும் மீறி, பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு அரண்மனையை முற்றுகையிட ஊர்வலமாகச் செல்லும் போர்க்கோலம்.

ஆனால், இச்சதிகாரர்கள் போடும் தப்புக் கணக்கு ஒருக்காலும் வெற்றி பெற முடியாது. ஏனெனில், வரலாற்றைப் படைக்கும் உந்துசக்தியான நேபாள மக்கள் வரலாற்றின் சக்கரத்தை பின்னுக்கு இழுத்துச் செல்லத் தயாராக இல்லை. மாவோயிஸ்டுகளின் ''அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலை நடத்து!'' என்ற முழக்கம் இப்போது மக்கள் முழக்கமாக எங்கும் எதிரொலிக்கிறது. ஏழு கட்சி கூட்டணியினர் தேர்வு செய்துள்ள கொய்ரலா வீட்டு முன்பு, ''தலைவர்களே, எச்சரிக்கை! எங்களுக்கு அரசியல் நிர்ணய சபைதான் வேண்டும்! துரோகம் வேண்டாம்!'' என்று எழுதப்பட்ட பதாகையை போராடும் நேபாள மக்கள் கட்டி வைத்துள்ளனர்.

போராட்டத்தின் முதற்கட்ட வெற்றி விழா கூட்டங்களில் உரையாற்றும் ஜனநாயகத்துக்கான இயக்கத்தின் முன்னணியாளர்கள், ''அரசியல் கட்சிகள் எங்களை வஞ்சித்தால், மன்னராட்சியோடு சேர்த்து அவற்றையும் குப்பைத் தொட்டியில் வீசியெறிவோம்! அரசியல் கட்சிகளே, எச்சரிக்கை! துரோகமிழைத்தால் உங்களைத் தூக்கில் தொங்க விடுவோம்!'' என்று பகிரங்கமாக அறிவிக்கின்றனர். சுருக்கமாகச் சொன்னால் ஜனநாயகம் என்பது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஓட்டுப் போடும் சடங்கு அல்ல; அது மக்கள் தமது கரங்களில் ஏந்திச் சுழற்றும் அதிகாரமாக மாற வேண்டும் என்ற வேட்கைதான் நேபாள மக்களின் நெஞ்சங்களில் கரை புரண்டு ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்தப் புரட்சிப் பேரலையைத் தடுத்து நிறுத்த முடியாத நிலையில், ''நாடாளுமன்றம் கூடியதும் முதல் நிகழ்ச்சி நிரலாக அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல் பற்றி விவாதித்து முடிவு செய்வோம்'' என்று ஏழு கட்சி கூட்டணியினர் உறுதியளித்துள்ளனர். ஆனால், கடந்த நவம்பர் வரை ''மாவோயிச பேரபாயத்திலிருந்து நாட்டைக் காப்போம்'' என்று மன்னராட்சிக் கொடுமையையும் மாவோயிஸ்டுகளின் புரட்சிகரப் போராட்டங்களையும் சமமாகச்சித்தரித்து வந்த ஏழு கட்சி கூட்டணியினர், வாக்குறுதி அளித்தபடி அரசியல் நிர்ணய சபையை நிறுவுவார்களா அல்லது மன்னரது சூழ்ச்சிகளுக்குப் பலியாகி துரோகமிழைப்பார்களா என்று உறுதியாகக் கூற இயலாது. நிபந்தனையற்ற முறையில் அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தலை அக்கூட்டணி நடத்த முன்வந்தாலும், அதை அமெரிக்க வல்லரசும் நேபாளத்தின் அண்டை நாடுகளான சீனாவும் இந்தியாவும் அங்கீகரிக்குமா, ஒரு சிவப்பு புரட்சியை - எவரெஸ்ட் சிகரத்தின் மீது செங்கொடி பட்டொளி வீசிப் பறப்பதை அனுமதிக்குமா என்பதற்கு உத்தரவாதமில்லை. நேபாள மக்களின் புரட்சியை நசுக்க எதிரிகளும் துரோகிகளும் எதையும் செய்வார்கள்.

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளில் கம்யூனிசத்தை ஒழித்துக் கட்டுவதற்கான போராட்டம் நடந்தபோது, அவற்றை 'ஜனநாயகத்துக்கான எழுச்சி' என்று ஓடோடிச் சென்று வரவேற்று ஆதரித்த ஏகாதிபத்தியங்கள், நேபாள மக்கள் இராணுவ அடக்குமுறையை எதிர்த்து ஜனநாயகத்துக்காக 18 நாட்களாக வீதிகளில் போராடியபோது கைகட்டி நின்றன. மன்னராட்சியை தூக்கி நிறுத்த அதிநவீன போர்த் தளவாடங்களைக் கொண்டு வந்து குவித்தன. ஆனால், எந்தவொரு ஏகாதிபத்திய நாட்டின் ஆதரவு இல்லாமல், அண்டை நாடுகளின் தார்மீக ஆதரவு கூட இல்லாமல் தமது சொந்தக் காலில் நின்று தன்னந்தனியே போராடி முதற்கட்ட வெற்றியைச் சாதித்துள்ளார்கள் நேபாள மக்கள். அம்மக்களின் புரட்சிப் போரை ஆதரித்து இமயத்தின் உச்சியில் உயரும் செங்கொடி தாழாமல் தாங்கிப் பிடித்து நிறுத்த வேண்டியது உலகெங்குமுள்ள புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் கடமை; நம் கடமை.

● குமார்

www.padippakam.com

# பொறுக்கி - கவர்ச்சி அரசியலில் மயங்கிக் கிடக்கும் தமிழகம்

## கலாச்சார சீரழிவு குறித்த ஒழுக்கவாத அங்கலாய்ப்பல்ல இது; அரசியல் சீரழிவின் நோய்க்குறிகளை அடையாளம் காணும் முயற்சி.

அழுகி நாற்றமெடுக்கும் முதலாளித்துவ ஜனநாயகம் என்ற சொற்றொடரின் முழுமையான பொருளை ஒரு இலக்கியம் போல உய்த்துணர்வதற்கு யாரேனும் விரும்பினால், அவர்கள் உடனே தமிழகத்திற்கு வரவேண்டும்.

''தோற்பது நானாக இருந்தாலும் வெல்வது பொறுக்கி அரசியலாக இருக்க வேண்டும். வீழ்வது நானாக இருந்தாலும் வாழ்வது சீரழிவாக இருக்க வேண்டும்'' என்ற கொள்கையுடன் ஓட்டுப் பொறுக்கி அரசியலை அடியாழம் காணமுடியாத அதல பாதாளத்தை நோக்கி இழுத்துச் சென்று கொண்டிருக்கிறார், புரட்சித்தலைவி.

முதல்வர் நாற்காலியிலமர்ந்து மக்கள் தொண்டாற்றிய நிலையிலேதான் தனது உயிர் பிரிய வேண்டும் என்ற 'கொள்கை வெறி'யுடன் களத்திலிறங்கியிருக்கும் கருணாநிதி, எந்தப் பாதாளத்திலும் பாய்ந்து பதவி நாற்காலியில் அமர்ந்துவிடத் துடிக்கிறார்.

இந்த வந்தனோபசார கடைசி ஆட்டத்தில், உணர்ச்சிபூர்வமான ரசிகர்களாகவும் தன்னுணர்விழந்த பாத்திரங்களாகவும் அவ்வப்போது வாக்காளர்களாகவும் இருக்கக் கொடுத்து வைத்த தமிழக மக்கள், எந்தக் கணத்தில் என்னவாக இருக்கிறோம் என்பதைத் தாங்களே அறிந்திராத காரணத்தினால், ஆட்டத்தின் ''கிளைமாக்ஸ்'' காட்சிக்குத் தேவைப்படுகின்ற திகில் தன்மையைத் தவிர்க்கவியலாமல் தோற்றுவிக்கிறார்கள்.

தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களின் தலைகளை மேய்கின்ற தொலைக்காட்சிக் ''காமெரா''க்கள் தரும் சித்திரத்தைக் காணும் போது ஒரு மிகப்பெரிய உள்நாட்டுப் போரைத் தமிழகம் சந்திக்கவிருப்பதைப் போன்ற பிரமை ஏற்படுகிறது. கொஞ்சம் நெருங்கி கூட்டத்தினரின் முகங்களைக் கூர்ந்து கவனிக்கும்போது பொய்மை உடனே புலப்பட்டு விடுகிறது.

''உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சி கடந்த 5 ஆண்டுகளில் செய்த சாதனைகளைப் பட்டியலிட்டுக் காட்ட உங்கள் 'அன்புச் சகோதரி'க்கு நேரம் போதாது என்பது உங்களுக்கே தெரியும்'' என்று தனது முதல் கட்டத் தேர்தல் பிரச்சாரம் முழுவதும் பேசிக் கொண்டிருந்தார் அன்புச் சகோதரி. ஆனால், ''2 ரூபாய் அரிசி, கலர் டி.வி.'' என்ற அஸ்திரங்கள் ஏவப்பட்டவுடன் அவருக்கு நேரம் கிடைத்து விட்டது. உளவுத்துறை மற்றும் களவுத்துறை அதிகாரிகள் இணைந்து எழுதிக் கொடுத்த வசனங்களை ஜெ உரக்கப் படிக்கிறார். ''2,34,561 விவசாயிகளுக்கு ரூ. 18,43,323.47 பைசா வழங்கியிருக்கிறேன்'' என்பன போன்ற எண் கணித எழுச்சியுரைகளை அவர் எவ்வளவு தான் குரலை உயர்த்திக் கத்தியபோதிலும் கூட்டம் எதையும் கண்டு கொள்வதில்லை.

கூட்டத்தை வாடகைக்குப் பேசிய மா.செ; ஒ.செ. மற்றும் மந்திரிகள், ''இரண்டு விரலைக் காட்டியபடி தொடர்ந்து கூத்தாடவேண்டும்'' என்று மட்டுமே 'மக்களுக்கு' உத்தரவிட்டிருக்கின்றனர். எனவே, ''இலவசம் இலவசம்'' என்று புரட்சித்தலைவி எத்தனை முறை கூவினாலும், அதைக் கடுகளவும் சட்டை செய்யாமல் இரண்டு விரலைக் காட்டியபடி தன் கடமையைச் செய்து கொண்டிருக்கிறது, மக்கள் கூட்டம்.

கருணாநிதியின் கூட்டமோ, 'இலவசம்' என்ற சொல்லைத் தலைவர் உச்சரித்தவுடனே 'திராவிட நாடு' என்ற சொல்லைக் கேட்ட போன்ற மனக் கிளர்ச்சியுடன் ஆர்ப்பரிக்கிறது. சர்வாதிகார ஆட்சியை விரட்டுவதற்கான உத்வேகத்தை மக்களுக்கு வழங்கும் ஆற்றல், 2 ரூபாய் அரிசிக்கும், கலர் டிவிக்கும் தான் உண்டு என்ற இந்த அரசியல் கண்டுபிடிப்பின் விளைவாக, இனி ஆடித் தள்ளுபடி, கோடைத்தள்ளுபடி ஆகியவற்றின் வரிசையில் ''சர்வாதிகார எதிர்ப்பு தள்ளுபடி விற்பனை'' என்ற புதிய விற்பனை உத்தியை வணிகர்களுக்கு கற்றுத் தந்திருக்கிறார், கருணாநிதி.

இந்தக் கேலிக்கூத்துகளுக்குத் தேவைப்படுகின்ற கூட்டத்தைக் கூட்டி, கூட்டத்திற்குத் தேவையான உணர்ச்சியையும் முன்கூட்டியே தட்டியெழுப்பித் தயார் நிலையில் வைப்பதற்காக தேர்தல் மேடைகளில் கூத்தாடுகிறார்கள் 'குத்தாட்டக் கலைஞர்கள்'. இதுதான் தமிழகத்தின் தேர்தல் களம்.

> **மே தினத்திற்கும், குடியரசு தினத்திற்கும் தொலைக்காட்சியில் தோன்றி ஆசியும் அறிவுரையும் வழங்கிய நட்சத்திரக் கழிசடைகள்தான் இப்போது தேர்தல் மேடைகளில் நேரில் தோன்றுகிறார்கள். 'இவர்களுக்கென்ன சம்பந்தம்' என்ற கேள்வியை அப்போதெல்லாம் எழுப்பாத மக்கள் கூட்டம், இப்போது மட்டும் எப்படிக் கேட்க முடியும்?**

சர்வாதிகார ஆட்சி எதிர்ப்பு, குடும்ப ஆட்சி தடுப்பு, இலவச சைக்கிள், இலவச அரிசி, இலவச டிவி போன்ற எவையும் தோற்றுவிக்காத உணர்ச்சியையும் உள்ளக் கிளர்ச்சியையும் மக்களிடம் தோற்றுவிக்கக் களத்தில் இறக்கப் பட்டிருக்கிறார்கள் சினிமாக் கழிசடைகள்.

ஜெ-சசி கும்பலிடம் சினிமா எடுக்க கந்துவட்டிக்குக் கடன் வாங்கிக் கட்டமுடியாததால் 1996-இல் 'ஜெயாவின் சர்வாதிகாரத்தை எதிர்த்து 'தி.மு.க.வில்


படிப்பகம்

சேர்ந்து, ராஜ்யசபா உறுப்பினர் ஆகி, மனைவியின் டிவி கம்பெனிக்கு ''சன்'' டிவியில் ஆண்டுக்கு 200 கோடி ரூபாய் வியாபாரமும் தேடிக் கொண்ட சரத்குமார் என்ற நடிகன் அவமானத்தால் துடிக்கிறார். ''சோனியா காந்திக்கு பூச்செண்டு கொடுக்க விடாமல் விரட்டினார் தயாநிதி மாறன்; மாநாட்டில் முன்வரிசையிலிருந்து என்னை கிளப்பிவிட்டார் பேராசிரியர்; நானிருக்க நடிகன் விஜய் வைத்து தபால்தலை வெளியிடுகிறார்கள்'' என்று கூறி மக்களிடம் நீதி கேட்கிறார்.



சென்னை - ஆர்.கே. நகர் தொகுதியில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர் சேகர் பாபுவை ஆதரித்துப் பிரச்சாரம் செய்த சிம்ரன், விந்தியா மற்றும் கோவைசரளா. இலவச கவர்ச்சித் திட்டங்களுக்கு மயங்காதவர்களைக் குறி வைக்கிறது, இந்த கவர்ச்சிக் கூத்து.

''என்னை ஜெ என்ன சொல்லி அவமானப்படுத்தினார் என்பதை வெளியில் சொன்னால் சமூக அமைதிக்கே ஆபத்து வந்துவிடும் என்பதால் பொறுமையாக இருக்கிறேன்'' என்று உறுமுகிறார் 'தேவரினச்சிங்கம்' கார்த்திக்.

மகளை வைத்துப் படமெடுத்து கடனில் சிக்கி, கரையேற வழியின்றி ''சன்'' டிவியைச் சரணடைந்த பாக்கியராஜ், ''அ.தி.மு.க.வில் எம்.ஜி.ஆர். விசுவாசிகளுக்கு போதிய 'மதிப்பு' இல்லையே'' என்று மருகுகிறார்.

போயசு தோட்டத்துக்குப் போய் 3 சீட்டுக் கேட்டு முக்கறுபட்டு வந்த தி.மு.க.வின் முன்னாள் கொள்கை பரப்புச்செயலர் டி.ராஜேந்தர், ''நான் எடுத்த படம் ஒருதலை ராகம், வைகோ என்பது ஒருதலை நாகம், அது கலைஞர் காலடியில் அமர்ந்திருந்த காகம்'' என்று முழங்குகிறார்.

மேடையேறிய சிம்ரன், ''எனக்கு பேசத் தெரியாது'' என்று வெட்கப்பட்டதும் அ.தி.மு.க. வேட்பாளரான ரவுடி சேகர் பாபு அவருக்கு வசனம் சொல்லித் தருகிறார். ''அம்மா ஆட்சியில் தண்ணிப் பிரச்சினையில்லை, ரவுடிப் பிரச்சினையில்லை'' என்று அவர் சொல்ல, ''நோ வாட்டர் ப்ராளம், நோ ரவுடியிசம்'' என்று அதை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கிறார் சிம்ரன். இந்தப் பேச்சைக் 'கேட்பதற்காக' மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரை காத்து நிற்கிறது ஒரு கூட்டம்.

இதுதான் தமிழகத்தின் தேர்தல் களம். இந்தக் கழிசடைகள் யாரை நம்பி இத்தனை தைரியமாக மேடையேறுகிறார்கள்? இலவசத் திட்டங்கள் தோற்றுவிக்கும் அடிமைப் புத்தியைக் காட்டிலும் ஆபத்தானது இந்த விபச்சார ரசனைக்கு மக்கள் ஆட்படுவது ஏன்?

''கொட்டுச் சத்தத்துக்கும் கூத்தாடிகளுக்கும் கூடும் கூட்டம் அவர்களை வேடிக்கை பார்க்குமேயொழிய அவர்கள் பேச்சைக் கேட்டு ஓட்டுப் போட்டு விடாது. இதை வைத்து மக்களின் அரசியல், பண்பாட்டுத் தரத்தை அளவிட்டு விடக்கூடாது'' என்று நாம் ஆறுதல் பட்டுக் கொள்ள முடியுமா?

நடிகர்களும் நடிகைகளும் தோன்றும் நுகர்பொருள் விளம்பரங்களை முதலில் வேடிக்கை என்று எண்ணிப் பார்க்கும் மக்கள்தான் பிறகு அவற்றின் வாடிக்கையாளர்கள் ஆகிறார்கள். இந்தத் தேர்தல் வேடிக்கையும் கூடத் திடீரென்று தோன்றிவிடவில்லை.

சுதந்திர தினத்தன்று விடுதலைப் போராட்ட வீரர்களும், குடியரசு தினத்தன்று ஜனநாயக உரிமைக்குப் போராடும் செயல் வீரர்களும், மே தினத்தன்று தொழிற்சங்க முன்னணியாளர்களும், பெண்கள் தினத்தன்று பெண் உரிமை அமைப்பினரும், உழவர் திருநாளன்று விவசாயிகளும் தொலைக்காட்சியில் வாழ்த்து சொல்வதையோ, தத்தம் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதையோ பார்த்திருக்கிறீர்களா? மே தினத்திற்கும், குடியரசு தினத்திற்கும் தொலைக்காட்சியில் தோன்றி ஆசியும் அறிவுரையும் வழங்கிய நட்சத்திரக் கழிசடைகள்தான் இப்போது தேர்தல் மேடைகளில் நேரில் தோன்றுகிறார்கள்.

**ஊழல் குற்றத்துக்காகத் தன்னாலேயே கைது செய்யப்பட்ட இந்திரகுமாரியையும், சேடப்பட்டியையும் கருணாநிதி வரவேற்கும் காட்சி, ஆபாசத்தில் நடிகர் செந்திலின் அரசியல் பிரச்சாரத்தையும் விஞ்சுகிறது.**

'இவர்களுக்கென்ன சம்பந்தம்' என்ற கேள்வியை அப்போதெல்லாம் எழுப்பாத மக்கள் கூட்டம், இப்போது மட்டும் எப்படிக் கேட்கும்? திரைப் படத்தைப் பார்க்கும்போது ரசிகன், ஓட்டுப் போடும்போது வாக்காளன் என்ற பிரிவினை வார்த்தைகளில் இருக்கிறதேயன்றி வாழ்க்கையில் ஒரே மனிதன் இரண்டாக இருப்பதில்லை.

வீடு, பள்ளிக்கூடம், கோயில், சினிமா, அரசியல் போன்றவை வெவ்வேறு தளங்கள் என்றும் அந்த இடங்களுக்குரிய விதிகளும் விழுமியங்களும் வேறுவேறானவை என்றும் கருதப்பட்டது உண்டு. ஆனாலும், இவற்றுக்கிடையில் சீனப் பெருஞ்சுவர் எதுவும் இல்லை.

பருவம் வராத பிள்ளைகள் பார்க்கத்தகாதவை என்று கருதப்பட்ட ''மிட்நைட்'' மசாலாக்களையும், தந்தையும் பிள்ளைகளும், சகோதரனும், சகோதரியும் சேர்ந்தமர்ந்து பார்க்க முடியாதவை என்று கருதப்பட்ட விரசக் காட்சிகளையும் குடும்பமே ஒன்றுகூடி ரசிக்கிறது; ஒழுக்கத்தைக் கற்றுத் தருவதற்கான இடங்கள் என்று கருதப்பட்ட பள்ளிகளின் விழாக்களில் தமது பிள்ளைகள் குத்தாட்டம் ஆடுவதைக் கண்டு பரவசப்படுகிறார்கள் பெற்றோர்கள். கோயில் திருவிழாக்களுக்குக் கூட்டம் சேர்த்து ஆன்மீகத்தை வளர்க்கவும் ''ரிகார்டு டான்ஸ்'' தேவைப்படுகிறது; அதே ''டான்ஸ் பார்ட்டி''தான் அரசியல் கூட்ட மேடைகளிலும் ஏறுகிறது.

நடிகைகளை விலைபேசி மேடையேற்றும் போட்டியில் ஜெயலலிதாவிடம் தோற்றுப் போனதால்,

www.padippakam.com

தி.மு.க.வினர் 'அரசியல் ஒழுக்கம்' பற்றி அங்கலாய்த்துக் கொள்கிறார்கள். இந்த ஒழுக்கசீலர்களின் ''சன்'' டி.வி.தான் மேற்சொன்ன முடைநாற்றத்தின் மூலாதாரம் என்பதையும், கலைஞர் பொதுவாழ்வுக்குப் பொன்விழா கொண்டாடியபோது அந்த மேடையில் அரங்கேற்றப்பட்டதும் கோடம்பாக்கத்தின் ''ரிகார்டு டான்ஸ்''தான் என்பதையும் அவர்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.



தான் போகின்ற இடத்துக்குத் தனது ரசிகர்களையும், சாதிக்காரர்களையும் இழுத்துச் செல்ல முடியும் என்ற நம்பிக்கையில் கட்சி மாறிய சினிமா கழிசடை சரத்குமார்.

இது, கலாச்சாரச் சீரழிவு குறித்த ஒழுக்கவாத அங்கலாய்ப்பல்ல; அரசியல் சீரழிவின் நோய்க்குறிகளை அடையாளம் காணும் முயற்சி. லஞ்சத்தை வெறுத்த மக்களை, 'லஞ்சம் தவிர்க்க முடியாதது' என்று காலப்போக்கில் அங்கீகரிக்கச் செய்ததைப் போல, போலீசு அராஜகங்களைக் கண்டு கோபமுற்ற மக்களை, 'போலீசு என்றாலே அராஜகம்தான்' என்று ஏற்கச் செய்ததைப்போல, குடிநீருக்கும் சிறுநீருக்கும் கூடக் காசு கொடுத்தாகவேண்டும் என்று பழக்கியதைப் போல இந்த அரசியல் சீரழிவுகளுக்கும் மக்கள் பழக்கப் படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

தான் போகின்ற இடத்திற்குத் தனது ரசிகர்களையும் சாதிக்காரர்களையும் இழுத்துச் செல்ல முடியும் என்ற நம்பிக்கை இருப்பதனால்தான் கார்த்திக், சரத்குமார், விஜயகாந்த் போன்ற கழிசடைகள் களத்தில் குதித்திருக்கிறார்கள். தன்னை பிழைப்புவாதியாகவும் தன் தாயை ஒழுக்கசீலியாகவும் தி.மு.க.வினர் சித்தரித்ததனால் கடுங்கோபமுற்ற வைகோ, ஜெயாவை வீட்டுக்கு அழைத்து, தன்னுடைய 'குடும்பமே பிழைப்புவாதக் குடும்பம்தான்' என்பதைத் தொலைக்காட்சிக் காமெராக்களின் முன்னால் நிரூபித்துக் காட்டுவதன் மூலம் தன் நல்லொழுக்கத்தை நிலைநாட்டுகிறார்.

''புலிக்கு 35, சிறுத்தைக்கு 9, சிங்கத்துக்கு சைபரா?'' என்ற கார்த்திக்கின் தன்மான முழக்கமும், சரத்குமாரின் அவமானக் குமுறலும் அவர்களை அம்பலப்படுத்துவதைக் காட்டிலும், அவர்களால் உணர்ச்சியூட்டப்படும் சாதிக்காரர்களின் பிழைப்புவாதத்தையே பெரிதும் அம்பலமாக்குகின்றன. ஊழல் குற்றத்துக்காகத் தன்னாலேயே கைது செய்யப்பட்ட இந்திரகுமாரியையும், சேடப்பட்டியையும் கருணாநிதி வரவேற்கும் காட்சி, ஆபாசத்தில் நடிகர் செந்திலின் அரசியல் பிரச்சாரத்தையும் விஞ்சுகிறது.

'பொறுக்கித் தின்பதற்காக ஓட்டுக் கட்சிகளிடையே நடைபெறும் இந்தப் போட்டியினூடாக இடையிடையே மக்களுக்குப் பொசிவதுதான் ஜனநாயகம்' என்ற புதிய இலக்கணம் அரசியல் அகராதியின் அதிகாரபூர்வ அங்கீகாரத்தைப் பெறுவது மட்டுமே இப்போது பாக்கியாக இருக்கிறது.

இந்தச் சீரழிவு, ஓட்டுப்பொறுக்கிகள் மட்டும் தனித்து நின்று நிகழ்த்திய சாதனை அல்ல. மறுகாலனியாக்க அரசியல் பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக நாட்டின் இறையாண்மையும் மக்களின் வாழ்வுரிமைகளும் சூறையாடப்பட்டு வரும் சூழலில் 'ஜனநாயகம்' என்பதே இந்த அரசமைப்பிற்கு ஒரு கோமாளித் தொப்பியாக மாறி வருவதையே இந்த நிகழ்ச்சிப் போக்குகள் பிரதிபலிக்கின்றன.

**கொள்கையின் இடத்தை கவர்ச்சித் திட்டங்களும் கவர்ச்சி நடிகர் - நடிகைகளும் பிடித்துக் கொண்டதைப் போலவே, கட்சிகளைப் பண முதலைகள் நேரடியாகவே கைப்பற்றிக் கொண்டு விட்டனர். கோடீசுவரன் மட்டும்தான் வேட்பாளராக முடியும் என்ற இந்த நிலைமை, கட்சி என்ற அமைப்பையே இல்லாமல் செய்து விட்டது.**

கொள்கையின் இடத்தை கவர்ச்சித் திட்டங்களும் கவர்ச்சி நடிகர்-நடிகைகளும் பிடித்துக் கொண்டதைப் போலவே, கட்சிகளைப் பணமுதலைகள் நேரடியாகவே கைப்பற்றிக் கொண்டு விட்டனர். கோடீசுவரன் மட்டும்தான் வேட்பாளராக முடியும் என்ற இந்த நிலைமை, கட்சி என்ற அமைப்பையே இல்லாமல் செய்து விட்டது என்பதை ஓட்டுக் கட்சித் தலைவர்களும் அறிவார்கள். ஆனால், அது பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை.

தற்போதைய ஓட்டுச் சீட்டு அரசியலுக்குக் கட்சியும் தொண்டர்களும் எந்த விதத்திலும் தேவைப்படவில்லை என்பதே உண்மை. பொதுக்கூட்டம் முதல் மாநாடு வரை அனைத்துப் பணிகளுமே காண்டிராக்டர்களிடம்தான் ஒப்படைக்கப்படுகின்றன. தொண்டர்கள் கொடிகட்டி, போஸ்டர் ஒட்டிய காலம் மலையேறி விட்டது. பிரச்சாரத்துக்கு நடிகர்களை மட்டுமின்றி, தொழில்முறை பட்டிமன்றப் பேச்சாளர்களையும் அமர்த்திக் கொள்ளும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. தலைவர்களின் பாதுகாப்புக்கோ போலீசு அல்லது தனியார் செக்யூரிட்டி ஏஜென்சி. மக்கள் கருத்தை அறிவதற்குக்கூட கீழ்மட்ட கட்சி அமைப்புகள் தேவையில்லை. கருத்துக் கணிப்புகளையும் தனியார் ஏஜென்சிகளே செய்து கொடுத்து விடுகின்றன. தொண்டர்களுக்கான பணிகள் அனைத்தையும் 'காசு' செய்து முடித்து விடுகிறது.

காசுக்கு விலைபோகாத விசுவாசத்தையும், உழைப்பையும் தொண்டர்களிடம் கோருகின்ற கொள்கை எதுவும் ஓட்டுக் கட்சிகளிடம் இல்லை. இலவச டி.வி., சைக்கிள், வெள்ள நிவாரணம் முதலான 'கொள்கைகளை' மக்களிடம் பிரச்சாரம் செய்வதற்கும் தொண்டர்களே தேவையில்லை. இந்தக் 'கொள்கைகளுக்காக' உயிரையும் கொடுக்கத் தயாராக உள்ள ஏழைகள் கோடிக்கணக்கில் இருக்கிறார்கள்.

ஓட்டுக்கு லஞ்சம் கொடுக்கவும் ஓட்டை உத்திரவாதம் செய்யவும் மட்டுமே நம்பகமான தொண்டர்கள் தேவைப்படுகிறார்கள். இதையும் தனியார் ஏஜென்சிகளிடம் விற்பனையாளர்

www.padippakam.com

கள் மூலம் செய்து முடிப்பது சாத்தியம் என்பதால், கட்சி என்ற அமைப்பிற்கான அவசியமே ஏறத்தாழ இல்லாமல் போய்விட்டது.

தொண்டர்களும் கட்சியும் தேவையில்லாமல் போய்விட்ட போதிலும் ஜனநாயகத்துக்கு வாக்காளர்கள் தேவைப்படுகிறார்கள். தங்களுடைய வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும் இந்தத் தேர்தலுக்கும் உள்ள தொடர்பைப் புரிந்து கொள்ள இயலாதவர்களாக வாக்காளர்களை மாற்றுவதில் ஓட்டுப் பொறுக்கிகள் பெருமளவு வெற்றி பெற்றிருப்பதனால்தான், அவர்களுக்கு 'ஜனநாயகம்' தொடர்ந்து அனுமதிக்கப் பட்டிருக்கிறது.

அதனால்தான் விவசாயத்தின் அழிவு, நகரமயமாக்கம், தொழிலாளர்கள் 12 மணி நேரம் வேலை வாங்கப் படுவது, தொழிற்சங்க உரிமைகள் ரத்து செய்யப்படுவது, கல்வி, மருத்துவம், தண்ணீர் என அனைத்தும் வணிகமய மாக்கப்படுவது.. என மக்களுக்கு ஓராயிரம் பிரச்சினைகள் இருந்தும், அவையெதுவும் இந்தத் தேர்தலில் எழுப்பப் படாமல் இருப்பதைப் பார்க்கிறோம்.

மறுகாலனியாக்கத்தால் சூறையாடப்படும் தங்கள் வாழ்க்கை பற்றியோ, இழந்து வரும் உரிமைகள் பற்றியோ, உதிர்ந்து வரும் விழுமியங்கள் பற்றியோ எவ்வித விழிப்புணர்வும் இல்லாமல், இலவசம்பஞ்சாய்ப் பறந்து கொண்டிருக்கும் வாழ்க்கையில் இலவசமே உறுதியான, புரியக்கூடிய கொள்கையாக மக்களுக்குத் தெரிகிறது. உரிமையின் இடத்தை இலவசம் கைப்பற்றிக் கொண்டதைப் போல, மக்களுடைய தன்மானத்தின் இடத்தை சினிமாக் கழிசடைகளின் 'அவமானக் குமுறல்' ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டது.

'ஓட்டுக் கட்சிகள் அனைவரும் அயோக்கியர்கள்' என்ற பொதுவானதொரு கருத்து மக்களிடம் நிலவிய போதிலும், அவர்களுடைய அயோக்கியத்தனங்களின் தன்மையை இனம் காண்பதற்கான அரசியல் அறிவை மக்கள் பெற்றுவிடவில்லை. வறுமையும் வேலையின்மையும் உழைப்புச் சுரண்டலும் மக்களுக்கு வர்க்க உணர்வைத் தானாகவே ஏற்படுத்திவிடுவதில்லை. எதிரிகளைப் பற்றி மட்டுமல்ல, அவர்களால் இழிந்த நிலைக்கு ஆளாக்கப் பட்டிருக்கும் மக்களுக்கு அவர்களுடைய அபாயகரமான நிலை குறித்த புரிதலையும் நாம் ஏற்படுத்த வேண்டியுள்ளது. புரட்சியாளர்கள் முன் உள்ள சவால் இதுதான்.

• சூரியன்

## மேலவளவு:

# எதிரிகளுடன் திருமா கூட்டு

ஜனநாயகத்தின் பெயரால் ஓட்டுப் பொறுக்கிகள் எழுப்பும் இரைச்சலில் ஒரு ஜனநாயகப் படுகொலை குறித்த தீர்ப்பு சத்தமில்லாமல் புதைக்கப்பட்டிருக்கிறது. 'மேலவளவுப் படுகொலை' என்று அறியப்படும் தலித்துகள் மீதான வன்கொடுமைப் படுகொலையில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கள்ளர் சாதிவெறியர்கள் 17 பேரின் மேல்முறையீட்டு மனுவை நிராகரித்து, அவர்களுடைய தண்டனையை உறுதி செய்திருக்கிறது சென்னை உயர் நீதி மன்றம்.


நீதிபதிகள் பி.சதாசிவம், என்.பால் வசந்தகுமார் ஆகியோர் கடந்த ஏப்ரல் 19-ஆம் தேதியன்று வழங்கியுள்ள இந்தத் தீர்ப்பு, கொலைகாரர்கள் 23 பேரைத் தப்பவைக்க ஜெயலலிதா அரசும் விசாரணை நீதிமன்றமும் துணை நின்றிருப்பதையும் அம்பலமாக்கியுள்ளது.

30.6.97 அன்று மதுரை மாவட்டம் மேலவளவு (ரிசர்வ்) ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் முருகேசன், துணைத் தலைவர் மூக்கன் மற்றும் ராஜா, செல்லதுரை, சேவகமூர்த்தி, பூபதி ஆகிய தலித்துகள் பட்டப்பகலில் பேருந்தை வழிமறித்துப் படுகொலை செய்யப்பட்டனர். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற இந்தப் படுகொலை மீதான அமர்வு நீதிமன்றத்தின் தீர்ப்பு ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் தான் (26.7.01) வந்தது.

''இந்தக் குற்றத்தைச் செய்வதற்கான நோக்கம் இவர்களுக்கு இருப்பதாக நிரூபிக்கப்படவில்லை'' என்று கூறி குற்றம் சாட்டப்பட்ட 40 பேரில் 23 பேரை விடுவித்தார் சேலம் மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி ராமலிங்கம். இதற்குக் கண்டனம் தெரிவித்து தனது தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறது உயர்நீதி மன்றம்: ''40 பேரையும் தண்டிப்பதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன. வன்கொடுமைத் தடுப்புச் சட்டம், 1989-இன் படியும் அனைவரையும் தண்டிப்பதற்கும் ஆதாரங்கள் உள்ளன. ஊராட்சி மன்றத்தின் தலைவரும் துணைத்தலைவரும் குறிவைத்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்கள். கொல்லப்பட்ட 6 பேர் மட்டுமல்ல, படுகாயமடைந்தவர்கள் அனைவரும் தலித் சமூகத்தினர்தான். அவர்களைத் தேர்தலில் நிற்கவொட்டாமல் அச்சுறுத்துவதுதான் இந்தக் கொலைகளின் நோக்கம் என்று முடிவுக்கு வருவதற்குப் போதுமான சாட்சியங்களும் இருக்கின்றன.''

''ஆனால் விசாரணை நீதிமன்றம் இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளவே இல்லை. 23 குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டதற்கெதிராக தமிழக அரசும் உயர்நீதி மன்றத்துக்கு மேல்முறையீடு செய்யவில்லை என்பது துரதிருஷ்டவசமானது. எனினும், சம்பவம் நடந்து 9 ஆண்டுகள் கடந்து விட்டதால் இவ்வழக்கின் மீது மறுவிசாரணை நடத்துமாறு உத்தரவிட நாங்கள் விரும்பவில்லை'' என்று கூறுகிறது உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு.

முருகேசன்



படிப்பகம்

www.padippakam.com

9 ஆண்டுகள் ஆகிவிட்டதால் 'மறப்போம் மன்னிப்போம்' என்று விட்டுவிடுவதற்கு இது தனிப்பட்ட விரோதம் காரணமாக நடந்த படுகொலையோ, சொத்துத் தகராறுக்காக நடந்துவிட்ட கொலையோ அல்ல. இதே மதுரை மாவட்டத்தின் பாப்பாபட்டி, கீரிப்பட்டி மற்றும் நாட்டார்மங்கலம், கொட்டகாச்சினேந்தல் போன்ற தலித்துகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ஊராட்சிகளில் இதுவரை தேர்தல் நடத்தப்படவில்லை என்பதுடன், சாதி ஆதிக்கவெறியர்களின் கைப்பாவைகளாகத் தேர்தலில் நிறுத்தப்படும் தலித்துகள், தேர்ந்தெடுக்கப்பட்ட மறுநாளே பதவி விலகும் அவலமும் தொடர்ந்து கொண்டுதானிருக்கிறது. சாதி ஆதிக்கவாதிகளுக்குப் பணியாமல் முருகேசனைப் போல யாரேனும் எதிர்த்து நிற்பார்களேயானால் அவர்களைக் கொலை செய்வதற்கும் சாதிவெறியர்கள் தயங்கமாட்டார்கள் என்பதே இன்றளவும் உண்மை.



பூபதி

மேலவளவு வழக்கில் துவக்கம் முதல் இன்று வரை தலித் மக்களுக்காகப் போராடி வரும் வழக்குரைஞர் இரத்தினம் அவர்களை இத்தீர்ப்பு வந்தவுடன் சந்தித்தோம். இந்த வழக்கின் வரலாறு குறித்து அவர் கூறும் விவரங்களும், சமூக நீதிக்கான வழக்குரைஞர் மையத்தின் சார்பில் அவர் வெளியிட்டுள்ள துண்டறிக்கையும் சாதிவெறியர்களுக்கு ஆதரவாக நீதித்துறையும் அரசும் ஓரணியில் நின்று செயல்பட்டதை அம்பலமாக்குகின்றன.

1996-ஆம் ஆண்டு மேலவளவு ஊராட்சி மன்றத் தலைவர் பதவி தலித்துகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. 10.9.96 அன்று வேட்பு மனு தாக்கல் செய்த முருகேசன் உள்ளிட்டோர் ஆதிக்கசாதியினரின் மிரட்டலுக்குப் பயந்து மனுவை வாபஸ் பெற்றனர். பிறகு சமாதானக் கூட்டம், மீண்டும் தேர்தல் ஓட்டுப் பெட்டிகள் களவாடப்பட்டன. மீண்டும் 31.12.96-இல் நடைபெற்ற தேர்தலை ஆதிக்க சாதியினர் புறக்கணித்தனர். தலித் மக்கள் மட்டுமே வாக்களிக்க, முருகேசன் தேர்ந்தெடுக்கப்பட்டார். 30.6.97 அன்று முருகேசன் உள்ளிட்ட 6 பேர் படுகொலை.

**ஓட்டுப் பொறுக்கி அரசியலிலிருந்து பிறந்து வரும் சந்தர்ப்பவாதமும் பிழைப்புவாதமும்தான் ''தலித்'' கட்சித் தலைவர்களைச் சாதிவெறியர்களோடு சமரசம் செய்து கொள்ளத் தூண்டுகிறது.**

27.3.98 அன்று கொலைகாரர்கள் அனைவருக்கும் உயர்நீதி மன்றம் நிபந்தனையற்ற ஜாமீன் வழங்கியது. பீதியடைந்த தலித் மக்கள சார்பில் இந்த ஜாமீனை எதிர்த்து மனு தாக்கல் செய்யப்பட்டது. அதனை உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்தது. இதனை எதிர்த்து உச்சநீதி மன்றத்துக்கு மனு செய்யப்பட்டது. ஜாமீனை ரத்து செய்யலாமா கூடாதா என மீண்டும் பரிசீலிக்குமாறு உயர்நீதி மன்றத்திற்கு உத்தரவிட்டது உச்சநீதி மன்றம்.



க. ராஜா

இதற்குள் வழக்கு விசாரைணக்கு வந்துவிட்டது. ''எங்கள் தரப்பில் அரசு வழக்குரைஞராக திருமலைராசன் அவர்களை நியமிக்க வேண்டும்'' என்று முருகேசனின் அண்ணன் கருப்பையா கொடுத்த மனுவுக்கு அரசு பதிலளிக்கவில்லை. ''வழக்கை மதுரையிலிருந்து சென்னைக்கு மாற்றினால்தான் சாட்சிகள் பயமின்றி சாட்சி சொல்லமுடியும் என்றும் திருமலைராசனை நியமிக்க வேண்டும்'' என்றும் அரசுக்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் மனுச் செய்தார் கருப்பையா. வழக்கு சேலத்துக்கு மாற்றப்பட்டது. திருமலைராசன் இவ்வழக்கிற்கான சிறப்பு அரசு வழக்குரைஞராக நியமிக்கப்பட்டார்.

சாதிவெறியர்களின் மிரட்டலுக்குப் பயந்து சில சாட்சிகள் எதிராகத் திரும்பினர். அரசுத் தரப்பு சாட்சியான தாசில்தார் ''இந்தக் கொலைக்கு வேறு சிலர் காரணமாக இருக்கக் கூடும்'' என்று கொலைகாரர்களைத் தப்பவைக்கும் நோக்கில் அறிக்கை கொடுத்தார். கொலைக்குற்றத்துக்காகவும், தீண்டாமைக் குற்றத்துக்காகவும் 17 பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கி, 23 பேரை விடுவித்தார் நீதிபதி ராமலிங்கம். (இவர் தற்போது உயர்நீதி மன்ற நீதிபதி என்பதும், இந்தக் கொலை வழக்கின் முதல் குற்றவாளி ராமருக்கு உறவினர் என்பதும் கூடுதல் செய்திகள்.)


வன்கொடுமைத் தடுப்புச் சட்டம்-பிரிவு 8, இது தேர்தல் தொடர்பான கொலை என்று ஊகிக்க அனுமதித்த போதிலும் நீதிபதி இதை நிராகரித்தார். பேருந்தை 40 பேர் வழிமறித்துக் கொலை செய்திருந்த போதிலும் ''இது சதித்திட்டம் தீட்டி நடத்தப்பட்ட கொலை'' என்ற குற்றச்சாட்டையும் ''கொலையில் நேரடியாகப் பங்கேற்காமல் பின்புலத்தில் இயங்கிய சதிகாரர்களையும் கொலைக் குற்றத்துக்காகத் தண்டிக்க வேண்டும்'' என்பதையும் நீதிபதி நிராகரித்து விட்டார். இத்தீர்ப்பின்படி, இது தற்செயலாக உணர்ச்சி வசப்பட்டு நடந்த கொலை - அவ்வளவுதான்.

''இத்தீர்ப்பை எதிர்த்து உடனே மேல்முறையீடு செய்யவேண்டும். 40 பேரும் தண்டிக்கப்பட வேண்டும். பொய்சாட்சி சொன்ன குற்றத்துக்காக தாசில்தாரும் தண்டிக்கப்பட வேண்டும்'' என்று தனது கருத்தை அரசு வழக்குரைஞர் என்ற முறையில் அரசுக்குத் தெரிவித்தார் திருமலைராசன். ஆனால், இதில் மேல்முறையீடு செய்ய எந்த சட்ட அடிப்படையும் இல்லை என்று கூறி நிராகரித்துவிட்டது ஜெ. அரசு.

ஆனால், தண்டிக்கப்பட்ட 17 கொலைக் குற்றவாளிகளும் உடனே மேல் முறையீடு செய்தனர். இதற்கெதிராக வாதாடவும் விடுவிக்கப்பட்ட 23 குற்றவாளிகளை தண்டிக்கவும் ஆந்திரத்தின் சிவில் உரிமை இயக்கத் தலைவரும் மூத்த வழக்குரைஞருமான கே.ஜி.கண்ணபிரான் சிறப்பு அரசு வழக்குரைஞராக ஆஜராக முன்வந்தார். அவரை நியமிக்கவேண்டுமென முருகேசனின் அண்ணன் கருப்பையா கொடுத்த மனுவையும் ஜெ. அரசு நிராகரித்தது.

26.7.2001 அன்று விசாரணை நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட மேலவளவு குற்றவாளிகளுக்கு ஒரே மாதத்தில் (27.8.2001) ஜாமீன் வழங்கியது உயர்நீதி மன்றம். பொதுவாக, கொலை வழக்குகளில் தண்டிக்கப்பட்ட யாருக்கும் குறைந்தபட்சம் 2 ஆண்டுகளுக்கு முன்ன

மூக்கன்



www.padippakam.com

தாக உயர்நீதி மன்றம் ஜாமீன் தருவதில்லை என்பதை இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும்.

''இந்த ஜாமீன் மனுவை ரத்து செய்ய வேண்டும்'' என்று கோரி உயர் நீதி மன்ற வழக்குரைஞர்கள் 12 பேர் உச்சநீதி மன்றத்திற்கு மனுச் செய்தனர். ''இந்த மனுவைத் திரும்பப் பெறாவிட்டால் சென்னைக்கே வந்து உங்களைக் கொலை செய்வோம்'' என்று தங்களுடைய தொலைபேசி எண்ணையும் கொடுத்து மேலவளவிலிருந்து மிரட்டல் கடிதம் எழுதினர் சாதிவெறியர்கள். இது தொடர்பாக காவல்துறை உயரதிகாரிகளுக்குத் தரப்பட்ட புகார் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. 4 ஆண்டுகள் சுதந்திரப் பறவைகளாக மேலவளவில் சுற்றி வந்த கொலைகாரர்கள், 11.2.2005-இல் தான் உச்சநீதி மன்ற உத்தரவின்படி மீண்டும் சிறையிலடைக்கப்பட்டனர். சென்னை உயர்நீதி மன்றத்தால் ''கவனக்குறைவு, துரதிருஷ்டம்'' என்று வருணிக்கப்பட்டுள்ள சம்பவங்களின் வரலாறு இதுதான்.

இந்த நெடிய கடுமையான போராட்டத்தை உணர்வுபூர்வமாகவும் விடாப்பிடியாகவும் நடத்திவருகிறார் வழக்குரைஞர் இரத்தினம். ஆதிக்க சாதிகளை எதிர்த்துப் போராடும் வழக்குரைஞர்களின் பணி நீதிமன்றத்தோடு முடிந்து விடுவதில்லை. சாதிவெறியர்களால் ஒவ்வொரு கணமும் மிரட்டப்படும் தலித் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதும், உயிருக்கு அஞ்சாமல் சாட்சி சொல்ல அவர்களுக்கு தைரியம் கொடுப்பதும் சாதாரணக் காரியங்களல்ல.

மேலவளவுப் படுகொலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சாலைமறியல் நடத்திய சவுந்தரபாண்டியன் என்ற தலித், கள்ளர் சாதிவெறியர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். திருமாவளவனுடன் தமிழால் ஒன்றுபட்டிருக்கும் சேதுராமன், மேலவளவுக் கொலைகாரர்கள் 40 பேரையும் விடுதலை செய்ய வேண்டுமென்று, 1000 கள்ளர் சாதிப் பெண்களைத் திரட்டிச் சென்று மதுரை ஆட்சியர் அலுவலகத்தை 1998-இல் முற்றுகையிட்டார். இதே காலகட்டத்தில் பாப்பாபட்டிக்கு பஞ்சாயத்து பேசப்போன முதல்வர் ஓ.பன்னீர், சாதிவெறியர்களை நாற்காலியில் உட்காரவைத்து, தான் தரையிலமர்ந்து பேசிய காட்சியையும் வாசகர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

தலித் மக்களுக்கு எதிராக நிற்பதில் தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் ஒன்றுக்கொன்று சளைத்தவையல்ல என்ற போதிலும், கடந்த 5 ஆண்டுகளில் சசிகலாவின் கள்ளர் சாதி ஆதிக்கக் கும்பல், மேலவளவுக் கொலைகாரர்களை விடுதலை செய்வதற்காக அரசு எந்திரத்தை ஆட்டி வைத்திருக்கிறது. சங்கராச்சாரிக்கு ஜாமீன மறுப்பதற்காக டெல்லியிலிருந்து வழக்குரைஞர் துளசி, சாலைப் பணியாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற உயர்நீதி மன்ற உத்தரவுக்கு எதிராக உச்சநீதி மன்றத்தில் அப்பீல்; ஆனால், அப்பீல் செய்ய வேண்டுமென்ற வழக்குரைஞர் திருமலைராசனின் சிபாரிசுக்கும், கண்ணபிரானை நியமிப்பதற்கும் மறுப்பு.

**''மேலவளவு கொலைகாரர்கள் 20 பேரின் விடுதலைக்கு எதிராக மேல் முறையீடு செய்வோம்'' என்ற செலவில்லாத இலவச வாக்குறுதியை அன்புச் சகோதரியிடமிருந்து வாங்கித்தர திருமாவளவன் முயன்று பார்க்கட்டும்.**

தலித் மக்களின் தன்னிகரில்லாத தலைவர்களாகத் தம்மைச் சித்தரித்துக் கொள்ளும் திருமாவளவனும் கிருஷ்ணசாமியும் இவ்வழக்கு தொடர்பாக எதுவும் செய்யவில்லை. ''மேலவளவு தியாகிகளுக்கு மண்டபம் கட்டி நினைவுநாள் கொண்டாடுவதோடு சரி, நிராதரவாக நிற்கும் அந்த மக்களுக்குத் தைரியம் சொல்லி அவர்களைச் சாட்சிகளாக அழைத்து வருவதற்குக் கூட எந்த உதவியும் செய்யவில்லை'' என்கிறார் இரத்தினம். உதவி செய்யாதது இருக்கட்டும், ''ஜெயாவின் ஆட்சியில்தான் தமிழகம் சாதிக்கலவரங்கள் இல்லாத அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்தது'' என்று குறிஞ்சாக்குளம் புகழ் வைகோவுடன் இணைந்து புரட்சித்தலைவிக்குப் பாராட்டுப் பத்திரம் படித்துக் கொண்டிருக்கிறார் திருமா.

''திருமாவின் கட்சிக்காரர்களோ, திண்ணியத்தில் மலத்தைத் திணித்த சாதிவெறியனின் வீட்டில் உட்கார்ந்து சோறு தின்று, அவனிடம் நன்கொடையும் வாங்கிக் கொண்டு சாட்சிகளைக் கலைத்துவிடுவதாக அந்த கிரிமினலுக்கு தைரியமும் சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள்'' என்று தனது குமுறலை வெளியிடுகிறார் இரத்தினம். பொறுக்க முடியாமல் இந்த உண்மைகளை வெளியில் சொன்னவுடன் 'சாதிப்புத்தியைக் காட்டிவிட்டதாக' வழக்குரைஞர் இரத்தினத்தின் மீது சேறு பூசுகிறார்கள் சிறுத்தைகள்.


இது தனிப்பட்ட தலைவர்கள் அல்லது தொண்டர்களின் அரசியல் ஒழுக்கம் குறித்த பிரச்சினை அல்ல; ஓட்டுப் பொறுக்கி அரசியலிலிருந்து பிறந்து வரும் சந்தர்ப்பவாதமும் பிழைப்புவாதமும் தான் இவர்களைச் சாதிவெறியர்களோடு சமரசம் செய்து கொள்ளத் தூண்டுகிறது; கொலைகாரர்களுக்கு நற்சான்றிதழ் கொடுத்து நண்பர்களை அவதூறு செய்யும் கேவலமான நிலைக்கு இவர்களைத் தாழ்த்துகிறது.

மேலவளவு முருகேசனும் அவருடன் 6 பேரும் கொலை செய்யப்படக் காரணம் அவர்கள் தலித்துகள் என்பது மட்டுமல்ல; சுயமரியாதையுள்ள தலித்துகள் என்பதனால்தான் அவர்கள் சாதிவெறியர்களால் படுகொலை செய்யப்பட்டார்கள். ''தமிழகத்தில் தீண்டாமைக் குற்றத்துக்காகத் தண்டனை வழங்கப்பட்ட முதல் வழக்கு மேலவளவு தான்'' என்று கூறுகிறார் திருமலைராசன். இந்த உண்மை ஒருபுறமிருக்க, நீதிமன்றம் உள்ளிட்ட இந்த அரசமைப்பின் மூலம் தீண்டாமையை ஒழிக்க முடியாது என்பதற்கும் மேலவளவு வழக்கின் வரலாறு சாட்சி கூறுகிறது. தனது உயிர்த்தியாகத்தின் மூலம் இந்த உண்மையை உறுதி செய்திருக்கிறார் முருகேசன்.


இது பொய் என்றால், தலித் மக்களுக்கு அரசதிகாரத்தில் பங்கு வாங்கப் போவதாக கூறும் திருமாவளவன், ஜெயலலிதாவிடமிருந்து தேர்தலுக்கு முன் ஒரேயொரு வாக்குறுதியை மட்டும் நமக்கு வாங்கித் தரட்டும். கருணாநிதியின் 2 ரூபாய் அரிசிக்கு போட்டியாக இலவச அரிசியை அறிவித்த அன்புச் சகோதரி, ''மேலவளவு கொலைகாரர்கள் 20 பேரின் விடுதலைக்கு எதிராக மேல்முறையீடு செய்வோம்'' என்ற செலவில்லாத இலவச வாக்குறுதியை ஒரேயொருமுறை அறிவிப்பாரா? திருமாவளவன் முயன்று பார்க்கட்டும்.

● மணி

சேவகமூர்த்தி



செல்லத்துரை



படஉதவி: ''தலித் முரசு''

www.padippakam.com

## தென்னமெரிக்க நாடுகளில் புதிய ஆட்சிகள்:

# இடதுசாரி அலையா? கானல் நீரா?

**வா**க்குறுதி அளித்து விட்டு, ஆட்சிக்கு வந்தபின் வஞ்சிக்கும் ஓட்டுப் பொறுக்கிகள் தொடர்ந்து பதவியில் நீடிக்க முடிவதில்லை. தமது விருப்பத்தையும் விதியையும் நிறைவேற்றாத ஓட்டுக்கட்சிகளையும் ஆட்சியாளர்களையும் அடுத்தடுத்த போராட்டங்களில் மக்கள் தூக்கியெறிகிறார்கள். மக்கள் தீர்ப்பைச் செயல்படுத்தாத பழைய வகைப்பட்ட ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் மக்களின் நம்பிக்கையை இழந்து செல்லாக் காசாகி விட்டன. மக்கள் கோரிக்கைகளைச் செயல்படுத்த விழையும் ஆட்சியாளர்கள் மட்டுமே பதவியில் நீடிக்க முடிகிறது. துரோகமிழைத்தால், உடனே மக்கள் போராட்டங்களில் இறங்குகிறார்கள். மக்களின் பேரெழுச்சியைக் கண்டு அஞ்சி துரோக ஆட்சியாளர்கள் நாட்டை விட்டே தப்பியோடுகிறார்கள்.

தென்னமெரிக்க கண்டம் முழுவதும் இத்தகைய மக்கள்திரள் போராட்டங்கள் காட்டுத் தீயாக பற்றிப் பரவுகிறது. தென்னமெரிக்க - மத்திய அமெரிக்க நாடுகளில் அடுத்தடுத்து நடந்துவரும் மக்கள் பேரெழுச்சிகளைக் கண்டு உலக மேலாதிக்க வல்லரசான அமெரிக்கா, விழிபிதுங்கி நிற்கிறது. ஒருநாட்டில் மக்கள் போராட்டங்களால் தனது விசுவாச ஆட்சிக்கு ஏற்பட்ட நெருக்கடியிலிருந்து அமெரிக்கா தப்பிக்குமுன், அடுத்த நாட்டில் மக்கள் போராட்டங்கள் பற்றி எரியத் தொடங்கி விடுகிறது. அர்ஜென்டினா, வெனிசுலா, பொலிவியா, ஈக்வடார் முதலான நாடுகளைத் தொடர்ந்து மத்திய அமெரிக்காவிலுள்ள சின்னஞ்சிறு நாடான ஹெய்தியில் அண்மையில் நடந்த மக்கள் பேரெழுச்சியானது, அமெரிக்காவின் முகத்தில் கரி பூசியுள்ளது.

ஹெய்தி - உலகின் நான்காவது ஏழை நாடு. அந்நாட்டின் மக்கள் தொகையில் 75 சதவீதத்தினர் நாளொன்றுக்கு ரூ. 50-க்கும் குறைவாக ஊதியம் பெறும் சாமானியர்கள். அமெரிக்கக் கைப்பாவைகளின் இராணுவ சர்வாதிகார ஆட்சியில் சிக்கித் தவித்த ஹெய்தி மக்கள், 2000-வது ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலில், ''விடுதலை இறையியல்'' கொள்கையைக் கொண்ட கத்தோலிக்கப் பாதிரியாரான பெர்டினாண்டு அரிஸ்டைடு என்பவரை அதிபராகத் தேர்ந்தெடுத்தனர். ஹெய்தியின் 200 ஆண்டு கால வரலாற்றில் முதன் முறையாக ஆகப் பெரும்பான்மையான மக்களின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்தவர்தான் அரிஸ்டைடு.

அவர் முந்தைய கைக்கூலி ஆட்சியாளர்களைப் போல அமெரிக்காவுக்கு காவடி தூக்காமல், மக்களுக்குத் தொண்டாற்றும் மனிதாபிமான உள்ளத்தோடு நல்வாழ்வுத் திட்டங்களுக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கினார். அமெரிக்க விசுவாச இராணுவப் படைகளுக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்தார். இத்தகைய அற்ப சீர்திருத்த நடவடிக்கைகளைக் கூட சகித்துக் கொள்ளாத அமெரிக்கா, முன்னாள் இராணுவத்தினர் - சமூக விரோதிகளைக் கொண்ட இரகசிய கொலைக் குழுக்களை ஹெய்தியில் கட்டியமைத்து சீர்குலைவு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி அதிபரை அச்சுறுத்தியது. அண்டை நாடான டொமினிகன் குடியரசிலிருந்து இக்கூலிப் படைகளைக் கொண்டு அவ்வப்போது தாக்குதல்களை நடத்தி பேரழிவுகளை விளைவித்தது. 2004-ஆம் ஆண்டு பிப்ரவரியில் இக்கூலிப் படைகள் அதிநவீன ஆயுதங்களுடன் நாடெங்கும் பெருந் தாக்குதல்களைக் கட்டவிழ்த்து விட்டன. இவற்றை ''ஹெய்தியில் ஜனநாயகத்துக்காக நடக்கும் கலகங்கள்'' என்று ஏகாதிபத்திய உலகம் கொண்டாடியது. இக்கூலிப் படைகளுக்கு ஆதரவாக அமெரிக்கப் படைகள் ஹெய்தி கடற்கரையில் கப்பலில் தயாராக நின்றன.

ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்ப்பது போல நாடகமாடிய பிரான்சு, ஹெய்தியில் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு ஆதரவாக நின்று படைகளை அனுப்பியது. ஜனநாயக சொர்க்கபுரியாகச் சித்தரிக்கப்படும் கனடா, அமெரிக்காவுக்கு விசுவாசமாக தனது படைகளை அனுப்பி வைத்தது. பிப்ரவரி இறுதியில் ஏகாதிபத்திய உலகின் ஆதரவோடு இக்கூலிப் படைகள் அதிபர் மாளிகையை முற்றுகையிட்டு அச்சுறுத்திய போதிலும், அரிஸ்டைடு பதவி விலக மறுத்து விட்டார். எனவே அவரை வலுக்கட்டாயமாகக் கடத்திச் சென்று மத்திய ஆப்பிரிக்க குடியரசில் கொண்டு போய் இக்கூலிப் படைகள் தள்ளின. ஹெய்தியில் மக்கள் பேராதரவோடு ஜனநாயகத்துக்கான போராட்டம் வெற்றி பெற்றுள்ளதாக ஏகாதிபத்தியவாதிகள் கோலாகலமாகக் கொண்டாடினர். கிறித்துவ வெறிபிடித்த அமெரிக்க அதிபர் புஷ், ஒரு கிறித்து பாதிரியாரின் தலைமையிலான ஆட்சியைக் கவிழ்த்து ஆக்கிரமித்ததை கிறித்துவ உலகம் வாய்மூடி வேடிக்கை பார்த்தது. ஒருநாட்டின் அதிபரைக் கடத்திச் சென்று 'ஜனநாயகத்தை' நிலைநாட்டிய அமெரிக்காவின் 'வீரதீர சாகச'த்தைக் கண்டு ஜனநாயக உலகம் கைகட்டி நின்றது.

ஈராண்டுகளுக்குப் பிறகு ஹெய்தியில் கடந்த பிப்ரவரியில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதன் பெயரால் அதிபர் பதவிக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. அமெரிக்காவின் ஆக்கிரமிப்பால் குமுறிக் கொண்டிருந்த ஹெய்தி

அமெரிக்காவுக்குக் காவடி தூக்காததால் அமெரிக்கக் கூலிப்படைகளால் நாடு கடத்தப்பட்ட அரிஸ்டைடு.



www.padippakam.com



சிலி நாட்டின் புதிய அதிபர்
மிசெல் பெச்லெட்.

மக்கள், நாடு கடத்தப்பட்ட முன்னாள் அதிபர் அரிஸ்டைடின் சீடரான ரெனே ப்ரீவல் என்பவரை தமது வேட்பாளராக நிறுத்தினர். ஆகப் பெரும்பான்மையான மக்கள் ஆதரவுடன் பெருவாரியான வாக்குகளைப் பெற்றிருந்த போதிலும், அமெரிக்க கைக்கூலிகளின் தேர்தல் கவுன்சில், மோசடிகளில் இறங்கி முடிவுகளை வெளியிடாமல் இழுத்தடித்தது. வெகுண்டெழுந்த மக்கள் தெருப் போராட்டங்களில் இறங்கினர். நிலைமை விபரீதமாவதைக் கண்டு அஞ்சி, ரெனே ப்ரீவல் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுள்ளதாக அமெரிக்கக் கைக்கூலிகள் அறிவித்தனர். உள்நாட்டு வெளிநாட்டு சீர்குலைவுவாதிகளை முறியடித்து ஹெய்தி மக்கள் தமது போராட்டத்தில் வெற்றியைச் சாதித்துள்ளனர்.

ஹெய்தியில் நடந்த மக்கள் பேரெழுச்சிக்கு முன்னதாக ஈக்வடாரில் மக்கள் பேரெழுச்சிகள் நடந்தன. ஹெய்தி மக்கள் அமெரிக்கக் கைக்கூலிகளுக்கு எதிராகப் போராடியதைப் போலவே, ஈக்வடார் மக்கள் அமெரிக்காவும் உலக வங்கியும் திணிக்கும் மறுகாலனியாதிக்கக் கொள்கைகளைச் செயல்படுத்திய அதிபர் லூசியோ குடியர்ஸுக்கு எதிராக பேரெழுச்சியில் இறங்கினார்கள். மக்களின் வெஞ்சினத்தை எதிர்கொள்ள முடியாமல் அதிபர் அமெரிக்காவுக்குத் தப்பியோடினார். அடுத்து வந்த அதிபர் ஆல்பிரடோ பலசியோ, அமெரிக்காவின் உத்தரவுகளை மறுபரிசீலனை செய்த பின்னரே நடைமுறைப்படுத்துவோம் என்று உறுதியளித்துள்ளார். இல்லையேல், அவரும் மக்களின் பேரெழுச்சியில் வீசியெறியப்படுவார் என்பது நிச்சயமாகிவிட்டது.

இதேபோல, அர்ஜெண்டினாவில் அடுத்தடுத்து மூன்று அதிபர்கள் மக்கள் போராட்டங்களை எதிர்கொள்ள முடியாமல் தப்பியோடியுள்ளனர். ஐ.எம்.எப்.-இன் உத்தரவுகளை எதிர்ப்பதாகவும், ஏகாதிபத்திய நாடுகள் அர்ஜென்டினாவுக்குக் கொடுத்த கந்து வட்டி கடனில் மூன்றில் இரண்டு பங்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற மக்களின் கோரிக்கையை நிறைவேற்றப் பாடுபடுவதாகவும் வாக்குறுதி அளித்துள்ளார், புதிய அதிபர் நிஸ்டர் கிர்சனர். இதனாலேயே அவர் பதவியில் நீடிக்க முடிகிறது; இல்லையேல் அவரும் முந்தைய அதிபர்களைப் போல மக்களால் விரட்டியடிக்கப்படுவார்.

பொலிவியாவில், அண்மையில் நடந்த தேர்தலில் அமெரிக்க கைக்கூலிகளின் ஆட்சி வீழ்த்தப்பட்டு புதிய அதிபராக இவா மொரேல்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தண்ணீர் தனியார்மயத்திற்கு எதிரான போராட்டங்களால் பிரபலமான கொச்சபம்பா பகுதியைச் சேர்ந்தவர்தான் இவாமெரேல்ஸ். இப்போராட்டங்களின் மூலம் முன்னணித் தலைவராக உயர்ந்த் அவர், "சோசலிசத்தை நோக்கிய இயக்கம்" என்ற அமைப்பை நிறுவி தொழிற்சங்க - விவசாய சங்கங்களின் சம்மேளனத் தலைவராக உயர்ந்து, மக்களின் பேராதரவோடு அதிபராகியுள்ளார். அமெரிக்கத் தடையால் வாழ்விழந்துள்ள பாரம்பரிய கோகோ விவசாயிகளின் உரிமையை மீட்டெடுக்கப் போவதாகவும், பொலிவியாவின் இயற்கை எரிவாயு-தாதுவளங்களை நாட்டுடமையாக்கி ஏகாதிபத்திய ஆதிக்கத்தை வீழ்த்தப் போவதாகவும் இவர் வாக்குறுதி அளித்துள்ளார். அதிபராகப் பொறுப்பேற்ற உடனேயே, அமெரிக்க எதிர்ப்புணர்வு கொண்ட வெனிசுலா அதிபர் சாவெஸ், கியூபா அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோ ஆகியோரைச் சந்தித்து ஏகாதிபத்திய சதிகளுக்கு எதிராகவும் சோசலிசத்துக்காகவும் ஒருங்கிணைந்து செயல்பட உறுதியளித்துள்ளார். இவா மொரேல்சும் சாவெசும் தமது வழியை "21-ஆம் நூற்றாண்டுக்கான சோசலிசம்" என்று குறிப்பிடுகின்றனர்.

பொலிவியாவைத் தொடர்ந்து சிலி நாட்டில் சோசலிஸ்டு கட்சியைச் சேர்ந்த மிசெல் பெச்லெட், அண்மையில் நடந்த தேர்தலில் பெருவாரியான வாக்குகளைப் பெற்று முதல் பெண் அதிபராகியுள்ளார். அமெரிக்கக் கைக்கூலியான பினோசெட்டின் ராணுவ சர்வாதிகார ஆட்சியில் தந்தை கொல்லப்பட்டு, சித்திரவதை முகாமில் அவதிப்பட்டு, பின்னர் அகதியாக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்து, இறுதியில் நாடு திரும்பிய அவர், அதிபராக உயர்ந்துள்ளதை பத்திரிகைகள் பாராட்டி எழுதுகின்றன.

ஏற்கெனவே கியூபா, வெனிசுலா ஆகிய நாடுகள் அமெரிக்காவை எதிர்த்து நின்று மக்கள் நல்வாழ்வுக்கான சில சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. சோசலிசத்தைக் கட்டியமைப்பதே தமது லட்சியம் என்றும் அந்நாடுகளின் அதிபர்கள் அறிவித்துள்ளனர். 'சோசலிச சிற்பி'யாகச் சித்தரிக்கப்படும் பிரேசில் நாட்டின் அதிபர் லூலா, "இன்னொரு உலகம் சாத்தியம்தான்!" என்று உலக சமூக மன்ற (WSF) மாநாடுகளில் முழங்குகிறார். இப்போது, பொலிவியாவில்


**கோகோ விவசாயிகளின் பேராதரவோடு பொலிவியாவின் அதிபரான இவா மொரேல்ஸ் (இடது) கியூபா அதிபர் ஃபிடல் காஸ்ட்ரோவுடன்.**



www.padippakam.com

ஏகாதிபத்திய எதிர்ப்பும் சோசலிச சிந்தனையும் கொண்டவராகக் காட்டிக் கொள்ளும் இவா மொரேல்ஸ் அதிபராகியுள்ளார். சிலி நாட்டில் சோசலிஸ்டு கட்சியைச் சேர்ந்த மிசெல் பெச்லெட் அதிபராகியுள்ளார்.

இந்நாடுகள் மட்டுமின்றி ஈக்வடார், மெக்சிகோ, பெரு ஆகிய நாடுகளில் 'இடதுசாரி' களும், நிகரகுவாவில் அமெரிக்க எதிர்ப்பாளர்களான சான்டினிஸ்டாக்களும் அடுத்து வரும் தேர்தலில் ஆட்சியைப் பிடிப்பதற்கான வாய்ப்புகள் உள்ளதாக பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன. இவற்றையெல்லாம் காட்டி தென்னமெரிக்க கண்டம் முழுவதும் "இடதுசாரி அலை" வீசுவதாக போலி கம்யூனிஸ்டுகளும் போலி சோசலிஸ்டுகளும் பெருமைப்பட்டுக் கொள்கின்றனர். "நம்மவர்கள் அதிகாரத்துக்கு வந்துவிட்டார்கள்" என்று பூரித்துப் போய் தமது பத்திரிகைகளில் பக்கம் பக்கமாக எழுதுகின்றனர். இவையும் சோசலிச ஆட்சிகள்தாம் என்று நம்பச் சொல்கின்றனர்.



வெனிசுலாவின் அதிபர் சாவெஸ் (இடது) அர்ஜென்டினா அதிபர் நிஸ்டர் கிர்சனர் (நடுவில்), பிரேசில் அதிபர் லூலா (வலது): இந்தக் கூட்டணி மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுமா?

ஆனால், இந்நாடுகளில் மக்கள் ஆதரவுடன் புதிய ஆட்சிகள் வந்துள்ளனவே தவிர, இவை சோசலிச ஆட்சிகள் அல்ல. வெனிசுலா அதிபர் சாவெசும் கியூபா அதிபர் காஸ்ட்ரோவும் மட்டுமே அமெரிக்காவின் மேலாதிக்கத்தையும் காலனியாதிக்க சதிகளையும் வெளிப்படையாக எதிர்த்து நிற்கின்றனர். ஆனால், இதர தென்னமெரிக்க நாடுகளின் அதிபர்கள் அவ்வாறு வெளிப்படையாக அமெரிக்க எதிர்ப்பில் நிற்பதில்லை. இந்நாடுகளில் ஆட்சிகள் மாறியுள்ளனவே தவிர, கீழிருந்து புரட்சிகரமான முறையில் அரசியல் அதிகாரம் கைப்பற்றப்படவில்லை. புரட்சிகர சித்தாந்தம் கொண்ட கட்சியின் தலைமையுமில்லை.

"21-ஆம் நூற்றாண்டுக்கான சோசலிசம்" என்று முழங்கும் பொலிவிய அதிபர் இவா மொரேல்ஸ், நாட்டின் தாதுவளத்தை ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து மீட்டு நாட்டுடமையாக்காகப் போவதாக வாக்குறுதி அளித்துள்ளாரே தவிர, இன்றுவரை அதற்கான எந்த முயற்சியும் அவர் மேற்கொள்ளவில்லை. சோசலிசம் பேசும் அவர், பொலிவிய அரசுத்துறை மின் நிலையங்களில் அந்நிய நிறுவனங்களைப் பங்குதாரர்களாகச் சேருமாறு அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கிறார். தனது இடதுசாரி கூட்டணிக் கட்சிகளின் அதிருப்தியிலிருந்து தப்பிக்க இவர் காஸ்ட்ரோவுடனும் சாவெசுடனும் கைகுலுக்கி புகைப்படம் எடுத்துக் கொள்கிறார். ஆனால், அவர்களது ஆலோசனைகளையோ வழிகாட்டல்களையோ அவர் செயல்படுத்த முயற்சிப்பதில்லை.

வெளிப்படையான ஏகாதிபத்திய கைக்கூலிகளையே விஞ்சும் வகையில், சோசலிசம் பேசும் பிரேசில் நாட்டின் அதிபர் லூலா, ஏகாதிபத்தியங்களுக்கு விசுவாசமாகச் சேவை செய்து கொண்டிருக்கிறார். லூலா அரசாங்கம், முந்தைய ஆட்சிகளை விட மிக வேகமாக உலக வங்கி - ஐ.எம்.எப்.பின் கடன்களை வட்டியோடு செலுத்திக் கொண்டிருக்கிறது. 1980-களில் உலகவங்கி-ஐ.எம்.எப். -இன் கடன்களைத் திருப்பிச் செலுத்த மாட்டோம் என்று மக்கள் போராட்டங்கள் பீறிட்டு எழுந்த அர்ஜெண்டினாவில், சோசலிசம் பேசும் புதிய அரசாங்கம் இக்கடன்களை விசுவாசமாகத் திருப்பிச் செலுத்திக் கொண்டிருக்கிறது. சிலி நாட்டின் புதிய பெண் அதிபரான மிசெல் பெச்லெட், முந்தைய ஆட்சியாளர்களின் வழியில் உலகமயச் சந்தையுடன் பிணைக்கப்பட்ட பொருளாதாரத் திட்டத்தையே மேற்கொள்ளப் போவதாகக் கூறுகிறார். உருகுவே நாட்டின் புதிய 'இடதுசாரி' ஆட்சியாளர்களோ, அமெரிக்க முதலீடுகளுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று உறுதியளித்து தொழில் தொடங்க அழைப்பு விடுக்கின்றனர். ஹெய்தியின் புதிய அதிபரோ அமெரிக்காவால் ஊட்டி வளர்க்கப்பட்ட இராணுவம் மற்றும் எதிர்ப்புரட்சி குண்டர்படைகளை முறியடிக்கவோ, சுதந்திரமாகச் செயல்படவோ முடியாமல் தத்தளிக்கிறார்.

இருப்பினும், தென்னமெரிக்க நாடுகளின் புதிய ஆட்சியாளர்கள் சோசலிசம் பேசுகின்றனர். அவ்வப்போது ஏகாதிபத்திய எதிர்ப்பு வீரவசனங்களைப் பொழிகின்றனர். விடுதலை இறையியல், அதிகாரத்துவ எதிர்ப்பு, சுற்றுச்சூழல், மண்ணின் மைந்தர்களது பண்பாட்டுப் பாதுகாப்பு, அந்நியக் கடன் எதிர்ப்பு, ஜனநாயகத்துக்கான கோரிக்கைகள் முதலானவற்றைக் கொண்ட கலவையாக இவர்களது சோசலிசம் அமைந்துள்ளது. இதையே இவர்கள் "21-ஆம் நூற்றாண்டுக்கான சோசலிசம்" என்கின்றனர்.

இந்த இளஞ்சிகப்பு (Pink) சோசலிசமானது பாதி புலம்பலாகவும் பாதி வசைபாடலாகவும், கடந்த காலத்தின் எதிரொலியாகவும் எதிர்காலத்தைப் பற்றிய மிரட்டலாகவும் இருக்கிறது. தற்கால வரலாற்றின் போக்கைப் புரிந்து கொள்ளும் திறனற்றதாக இருக்கிறது. இதனால் கோமாளித்தனமான - அவலமான விளைவை உண்டாக்கக்கூடிய அபாயத்தைக் கொண்டிருக்கிறது. ஏகாதிபத்தியத்தை மிரட்டுவதற்கான கிலியூட்டும் பொம்மையாகத்தான் இந்த சோசலிசம் பயன்படுகிறது. காலனியாதிக்கத்தாலும் சர்வாதிகார ஆட்சிகளாலும் வதைபட்ட தென்னமெரிக்க மக்களுக்கு இந்த சோசலிசம் தற்போதைக்கு இனிப்பான நம்பிக்கையாக மாறியுள்ளது.

ஏகாதிபத்தியத்துக்கு எதிராக சுயசார்பான தேசியப் பொருளாதாரத்தைக் கூட கட்டியமைக்காமல், ஏகாதிபத்திய நிறுவனங்களையும் முதலீடுகளையும் நட்டாஈடின்றிப் பறிமுதல் செய்யாமல், அந்நிய முதலீடுகளை வரவேற்றுக்

www.padippakam.com

கொண்டு ''இன்னொரு உலகம் சாத்தியம்தான்!'' என்று பகற்கனவு காணும் இந்தக் குட்டி முதலாளித்துவ சோசலிசம், பெயரளவில் இடது சாரியாகவும் சாராம்சத்தில் வலதுசாரியாகவும் உள்ள மையவாதக் கலவையாகவே இருக்கிறது. இந்த 'இடதுசாரி' கானல்நீரைக் காட்டி இதுவும் சோசலிசம்தான் என்று தென்னமெரிக்க மக்கள் மட்டுமின்றி உலகெங்குமுள்ள உழைக்கும் மக்கள் ஏய்க்கப்பட்டு வருகிறார்கள். நாளை இந்தப் புதிய வகை 'இடதுசாரி' ஆட்சியாளர்களின் துரோகங்கள் அம்பலமாகும்போது, உழைக்கும் மக்களுக்கு சோசலிசத்தின் மீதே வெறுப்பைத்தான் விளைவிக்கும். அது, தெனாலிராமன் பூனைக்குப் பால் வைத்த கதையாகவே முடியும்.

கீழிருந்து பீறிட்டு எழும் மக்களின் பேரெழுச்சிகளில் அமெரிக்ககைக்கூலிகளின் ஆட்சிகள் தூக்கியெறியப்பட்டு, தென்னமெரிக்க நாடுகளில் புதிய ஆட்சிகள் வந்துள்ளனவே தவிர, இவை இடதுசாரி ஆட்சிகளோ, சோசலிச ஆட்சிகளோ அல்ல; குறைந்தபட்சம் ஏகாதிபத்திய எதிர்ப்பு-சுதந்திர தேசிய ஆட்சிகளும் அல்ல. சோசலிசம் பேசும் குட்டி முதலாளித்துவ தலைமையிலான இப்புதிய ஆட்சிகள் தொடர்ந்து நீடிக்குமா, அல்லது வீழ்த்தப்படுமா என்பது தென்னமெரிக்க மக்களின் அரசியல் விழிப்புணர்வையும் போராட்டத்தையும் பொருத்தே உள்ளது. ஆனால், ஏகாதிபத்திய ஆதிக்கத்திலிருந்து நாட்டை விடுவிக்கும் புரட்சிக்குக் குறைவான எந்தவொரு ஆட்சி மாற்றத்தாலும் தென்னமெரிக்க மக்களைச் சாந்தப்படுத்தி விட முடியாது என்பது மட்டும் நிச்சயம்.

இந்நிலையில், . அமெரிக்க கைக்கூலிகளின் சர்வாதிகார ஆட்சிகளுக்குப் பதிலாக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இப்புதிய ஆட்சிகளைக் கவிழ்க்க அமெரிக்கா மேற்கொண்டுவரும் சூழ்ச்சிகள் - சதிகளை அம்பலப்படுத்தி முறியடிக்க வேண்டியது புரட்சிகர - ஜனநாயக சக்திகளின் கடமையாகும். அதேசமயம், இத்தகைய புதிய ஆட்சிகளையே சோசலிசம் என்று சித்தரித்துவரும் போலி கம்யூனிஸ்டுகள் - போலி சோசலிஸ்டுகளின் பித்தலாட்டங்களை முறியடிக்க வேண்டியது அதைவிட முக்கிய கடமையாகும்.

• மனோகரன்

---

## மரணத்திற்குப் பின்னும் வாழ்வு

# தோழர் ஸ்டாலினுக்கு சிவப்பஞ்சலி!



மக்கள் கலை இலக்கியக் கழகத்தோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு சோர்வில்லாமல் பணியாற்றிய தோழர் மயிலாடுதுறை ஸ்டாலின், கடந்த 20.2.06 அன்று திடீரென ஏற்பட்ட உடல்நலக் கோளாறினால் மரணமடைந்தார். சாதி-மதச் சடங்குகளின்றி நடைபெற்ற அவரது இறுதி ஊர்வலத்தில் ஏராளமான தோழர்களும் நண்பர்களும் கலந்து கொண்டனர். அதனைத் தொடர்ந்து கடந்த 9.4.06 ஞாயிறு அன்று மயிலாடுதுறையில் தோழர் ஸ்டாலினது படத்திறப்பும் சிவப்பஞ்சலிக் கூட்டமும் தஞ்சை ம.க.இ.க. தோழர்களால் நடத்தப்பெற்றன. ம.க.இ.க. மாநில இணைச் செயலாளர் தோழர் காளியப்பன் தலைமையில் நடந்த இந்நிகழ்ச்சியில், பு.ஜ.தொ.மு. பொதுச் செயலாளர் தோழர் சுப.தங்கராசு, தோழர் ஸ்டாலினது படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். மயிலாடுதுறை பெரியார் பகுத்தறிவு மையத் தலைவர் தோழர் நாக.இரகுபதி, கவிஞர் தோழர் துரை.சண்முகம், சீர்காழி வட்ட வி.வி.மு. தோழர் அம்பிகாபதி, தமிழர் உரிமை இயக்கத் தலைவர் திரு.முரளி, இரயில்வே அலுவலர் திரு.கிருட்டிணன் ஆகியோர் தோழர் ஸ்டாலின் அவர்களின் உயரிய பண்புகளைநினைவு கூர்ந்தனர்.

தோழர் ஸ்டாலின் தமிழக அறநிலையத் துறையில் முதல்நிலை செயல் அலுவலராகப் பணியாற்றிக் கடந்த ஆண்டு இறுதியில் ஓய்வு பெற்றார். இளம் வயதிலிருந்தே உழைக்கும் மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும் உணர்வோடு செயல்பட்டார். தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்விக்கு உதவுவதில் கவனம் செலுத்தி, தனது ஊதியத்தில் ஒரு பகுதியை அதற்காகவே செலவிட்டார். ஈழ விடுதலை, தமிழினக் குழுக்களின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட தோழர் ஸ்டாலின், பின்னர் ம.க.இ.க.வும் அதன் தோழமை அமைப்புகளும் மட்டுமே உண்மையான புரட்சிகர அமைப்புகள் என்பதைத் தனது சொந்த அனுபவத்தில் உணர்ந்து, மார்க்சிய-லெனினிய சித்தாந்தத்தின் மீது பற்றும் நம்பிக்கையும் கொண்டு செயல்பட்டார். இரத்த அழுத்தம், சர்க்கரை நோய், கழுத்தெலும்பு தேய்வு என நிரந்தர நோய்கள் அவரை வாட்டிய போதிலும், விடுமுறை நாட்களில் கூட ஓய்வெடுக்காமல், இயக்கப் பணிகளில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார். அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றதும் முழு நேரத்தையும் இயக்கப் பணிகளுக்காகவே செலவிட்டார்.

அவர் பணியாற்றிய துறையில், அப்பழுக்கற்ற அலுவலராகச் செயல்பட்டு அத்துறை ஊழியர்களின் பெருமதிப்பைப் பெற்று விளங்கினார். ''முழு நாத்திகரான தோழர் ஸ்டாலின்தான் பல கடவுள்களையும் அவர்களது சொத்துக்களையும் காப்பாற்றினார். பகல் வேஷம் போடும் பக்திமான்களான பல உயர் அலுவலர்கள் கடவுள் சொத்துக்களைச் சூறையாடியுள்ளனர்'' என்று தோழர் காளியப்பன் இந்நினைவஞ்சலிக் கூட்டத்தில் குறிப்பிட்டது முற்றிலும் உண்மை. தோழர் ஸ்டாலின் மரணமடைந்ததும் சில பார்ப்பன அர்ச்சகர்கள் நேரில் வந்து அஞ்சலி செலுத்தியதே இதற்குச் சான்று.

மக்கள் மீது மாளாப்பற்று, புரட்சியின் மீது அசைக்க முடியாத நம்பிக்கை, சுயநல மறுப்பு, நேர்மை, உயரிய தோழமை எனக் கணக்கற்ற கம்யூனிசப் பண்புகளின் உறைவிடம்தான் தோழர் ஸ்டாலின்.

தோழர் மயிலாடுதுறை ஸ்டாலினின் நினைவை நெஞ்சிலேந்துவோம்!

*— ம.க.இ.க., தஞ்சை.*

# பிரான்சை உலுக்கிய மாணவர் போராட்டம்

## தனியார்மயத் தாக்குதலை ஒன்றுபட்டுப் போராடி வீழ்த்த முடியும் என நிரூபித்துள்ளனர், பிரெஞ்சு பல்கலைக்கழக மாணவர்கள்.

''தெருப் போராட்டங்களின் ஆட்சி நடைபெறுகிறது; அதிபர் சிராக்கே, பதவியை விட்டு விலகு!'', ''அதிபர் சிராக்கே, தெருப் போராட்டங்களின் சக்தியைக் குறைத்து மதிப்பிடாதே!'' கடந்த மூன்று மாதங்களாக இப்படிபட்ட போராட்ட முழக்கங்கள் பிரான்சு நாட்டின் மூலை முடுக்கெல்லாம் எதிரொலித்து, பிரெஞ்சு ஏகாதிபத்திய ஆளுங் கும்பலின் வயிற்றைக் கலக்கி வந்தன.

பிரான்சு நாட்டிலுள்ள 84 பல்கலைக்கழகங்களுள், நான்கில் மூன்று பங்கு பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்துவிட்டு, இத்தெருப் போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, இப்போராட்டத்தின் முன்னணி வீரர்களாக இருந்தனர்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆதரவாக பள்ளிக்கூட மாணவர்கள், அரசாங்க - தனியார்துறை ஊழியர்கள், வேலையில்லா பட்டதாரிகள், இளைஞர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், அனைத்து இடதுசாரி தொழிற்சங்கங்கள் என ஒட்டுமொத்த பிரான்சு நாடே, அந்நாட்டின் ஆளும் கும்பலை எதிர்த்து நின்றது.

ஒருபுறம் போலீசின் ஒடுக்குமுறை; இன்னொருபுறம் பேச்சு வார்த்தை நாடகம் என்ற கிடுக்கிப் பிடிக்குள் இப்போராட்டத்தை நசுக்கிவிட பிரெஞ்சு அரசாங்கம் முயன்றது. அதேபொழுதில், மாணவர்களின் போராட்டக் குணமோ, ''செய் அல்லத செத்துமடி'' என்பதில் உறுதியாக நின்றது.

இப்படி பிரான்சு நாடே பற்றி எரிய, ஒரு சட்டதிருத்தம்தான் காரணமாக அமைந்தது. பிரெஞ்சு ஆளும் கும்பல் அந்தச் சட்டத்திருத்தத்திற்கு இட்டிருக்கும் பெயர், ''முதல் வேலைவாய்ப்பு ஒப்பந்தம்''.

பிரெஞ்சு தொழிலாளர் நலச் சட்டத்தின்படி, ஒரு தொழிலாளி புதிய பணியில் சேர்ந்து, மூன்று மாதம் தொடங்கி ஆறு மாதம் முடியவுள்ள தனது நன்னடத்தைக் காலத்தை (Probationary period) முடித்துவிட்டாரென்றால், அவர் நிரந்தரத் தொழிலாளியாக மாறி விடுவார். அவரை நன்னடத்தைக் காலத்தில் கூட எளிதாகப் பணி நீக்கம் செய்ய முடியாதபடி சட்டப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பிரெஞ்சு அரசாங்கத்தால் தற்பொழுது கொண்டு வரப்பட்டுள்ள திருத்தம், இந்த உரிமைக்கு உலை வைக்கிறது. இச்சட்டத் திருத்தத்தின்படி, புதிதாகப் பணியில் சேரும் 26 வயதுக்குக் கீழான தொழிலாளர்களின் நன்னடத்தைக் காலம் இரண்டு ஆண்டுகள் என நீடிக்கப்பட்டுள்ளதோடு, நன்னடத்தை காலத்தில் எவ்விதக் காரணமும் அளிக்காமல் இந்த இளைய தொழிலாளர்களைப் பணிநீக்கம் செய்யலாம் என்ற சலுகையினையும் முதலாளிகளுக்கு வாரி வழங்கியுள்ளது.

•••

பிரான்சு, உலகின் மிகப் பெரும் ஏழு பணக்கார நாடுகளில் ஒன்றாக, வெளிப்பார்வைக்கு மிடுக்காகத் தெரிந்தாலும், அந்நாடு உள்ளுக்குள் அழுகி நாறிக் கொண்டிருக்கிறது என்பதே உண்மை. அந்நாட்டின் மக்கள் தொகையில் 25 சதவீதப் பேர், எவ்வித வேலையும் கிடைக்காமல், உதிரிகளாக, நாடோடிகளாக வாழ்க்கையை ஓட்டி வருகின்றனர். பிரெஞ்சு கருப்பின இளைஞர்கள் மத்தியில் இந்த வேலை வாய்ப்பின்மை, 50 சதவீதத்தைத் தாண்டிவிட்டது. வறுமை, ஏழை-பணக்காரன் ஏற்றத்தாழ்வு, இனப்பாகுபாடு என்ற முதலாளித்துவத்தின் சாபக்கேடுகளை அந்நாட்டில் சர்வ சாதாரணமாகக் காணமுடியும். பிரெஞ்சு புரட்சியின் மூல முழக்கங்களுள் ஒன்றான சமத்துவம் என்பதை பிரெஞ்சு ஏகாதிபத்தியம் குழி தோண்டிப் புதைத்தே விட்டது.

பிரெஞ்சு ஏகாதிபத்திய முதலாளிகள், கூலி மலிவாக உள்ள ஏழை நாடுகளில் தங்கள் தொழிற்சாலைகளை இடம் மாற்றி அமைத்துக் கொள்வது; உள்நாட்டில் ஏற்கெனவே இருந்து வரும் தொழிலாளர் நலச் சட்டங்களை ஏய்க்கும் விதத்தில் காலியிடங்களை நிரப்புவது; நிரந்தரப் பணியிடங்களில் பயிற்சியாளர்களை நியமித்து குறைந்த கூலியில் வேலை வாங்கிக் கொள்வது போன்ற பல தந்திரங்களின் மூலம், தங்களின் இலாபம் சரிந்துவிடாமல் பார்த்துக் கொள்வதில் குறியாக உள்ளனர்.

இந்த இலாபவெறி, பிரெஞ்சு இளைஞர் சமுதாயத்தை வெகுவாகத் தண்டித்து வருகிறது. இரண்டு முதுகலைப் பட்டங்களைப் பெற்றுவிட்டு, 30 வயது ஆன பின்னும் நிரந்தர வேலை எதுவும் கிடைக்காமல், எல்லாத் தேவைகளுக்கும் பெற்றோர்களை எதிர்பார்த்து வாழும் இலட்சக்கணக்கான இளைஞர்களை அந்நாட்டில் காண முடியும்.

ஆனால் பிரெஞ்சு அரசாங்கமும், முதலாளிகளும் இந்த அவலத்திற்குக்

பாரீசிலுள்ள ஸோர்போன் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக, சட்டத்திருத்தத்தைத் திரும்பப் பெறக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தும் மாணவர்கள்.




www.padippakam.com

காரணமான இலாபவெறியை மூடி மறைத்துவிட்டு, ''பிரெஞ்சுத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள்தான் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கத் தடையாக உள்ளன; உலகமயத்தோடு கலக்க முடியாமல் பிரெஞ்சு சமூகத்தைத் தடுக்கின்றன'' என முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். பிரான்சு நாட்டை பிடித்தாட்டும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்குத்தான், இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதாகக் கூறுகிறார், அதிபர் சிராக்.

இச்சட்டத் திருத்தம் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கப் போவதில்லை; மாறாக, பிரெஞ்சு தொழிலாளி வர்க்கம் போராடிப் பெற்றுள்ள உரிமைகளை — வாரத்திற்கு 35 மணி நேர வேலை; வருடத்திற்கு இரண்டு போனசு; சம்பளத்துடன் கூடிய ஐந்து வார கால சுற்றுலா விடுமுறை; ஓய்வூதிய, மருத்துவச் சலுகைகள் — ஒவ்வொன்றாக ஒழிக்கப் போகும் நரித்தனத்தின் முதல் படி என்பதனை பல்கலைக்கழக மாணவர்கள், வேலையில்லாத இளைஞர்கள் மட்டுமின்றி, பிரெஞ்சு உழைக்கும் மக்கள் அனைவரும் உணர்ந்திருந்தனர். முதலாளித்துவத்தின் கீழ் அடைந்துள்ள ''பணி பாதுகாப்பு'' என்ற குறைந்தபட்ச உரிமையைப் பாதுகாக்கப் போராடப் போகிறோமா? அல்லது உலகமயமாக்கம் என்னும் காட்டுமிராண்டித்தனத்தின் கீழ் நசுங்கிவிடப் போகிறோமா? என்பதுதான் இப்போராட்டத்தின் மையமான பிரச்சினையாக எழுந்து நின்றது.

உலகமயத்திற்கும், பிரெஞ்சு முதலாளிகளுக்கும் ஆதரவாக இப்படியொரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்காக, பிரெஞ்சு ஆளும் கட்சி ''நாடாளுமன்ற ஜனநாயகத்தை''க் கூட குழி தோண்டி புதைத்தது. இச்சட்டத் திருத்தம் பிரெஞ்சு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படாமல், குறுக்கு வழியில் நாடாளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இச்சட்டத் திருத்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து முதன்முறையாக பிப்ரவரி 7 அன்று பிரான்சின் பல்வேறு நகரங்களில் மாணவர் சங்கங்கள் நடத்திய ஆர்ப்பாட்டங்களில் ஏறத்தாழ 4 இலட்சம் பேர் கலந்து கொண்டனர். இத்திருத்தம் குறுக்கு வழியில் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டவுடனேயே, பிரான்சின் புகழ்பெற்ற ஸோர்போன் பல்கலைக்கழகத்தை மாணவர்கள் கைப்பற்றிக் கொண்டனர். அதிரடி போலீசார் அம்மாணவர்களைத் தடியடி நடத்தி வெளியேற்றிய பிறகு, மாணவர்களின் போராட்டம் மாபெரும் மக்கள் திரள் போராட்டமாக வளர்ந்து சென்றது.



தௌலௌசி நகரில் இலட்சக்கணக்கான மக்கள் பங்கு கொண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் ஒரு பகுதி.

பல்கலைக்கழக மாணவர்கள் - வேலையில்லாத இளைஞர்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, பிரெஞ்சு அதிபர் சிராக் மார்ச் 27 அன்று இத்திருத்தத்தைச் சட்டமாக அறிவித்தார். இதனை எதிர்த்து மார்ச் 28 அன்று பிரான்சு நாடெங்கும் 130 இடங்களில் நடந்த ஆர்ப்பாட்டங்களில் ஏறத்தாழ 30 இலட்சம் பேர் பங்கு பெற்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட எந்தவொரு சங்கமும் அரசாங்கத்தோடு சமரச பேச்சுவார்த்தை நடத்த முன்வராததால், அதிபர் சிராக் ஒருதலைப்பட்சமாக, ''சட்டத் திருத்தத்தில் உள்ள நன்னடத்தைக் காலத்தை ஒரு வருட காலமாகக் குறைத்துக் கொள்வதாகவும்; நன்னடத்தைக் காலத்தில் வேலை நீக்கம் செய்யப்படும் இளம் தொழிலாளர்களுக்கு, அதற்குரிய காரணம் சொல்லப்பட வேண்டும் என்ற புதிய விதியை உருவாக்கப் போவதாகவும்'' வாக்குறுதி கொடுத்தார். இந்த சில்லறை சலுகைகள் போராட்டத்தைப் பிசுபிசுக்கச் செய்து விடும் என எதிர்பார்த்திருந்த பிரெஞ்சு ஆளும் கட்சிக்கு ஏமாற்றமே பரிசாகக் கிடைத்தது.

அதிபர் சிராக் இந்தச் சில்லறை சலுகைகளை, தனது தேசிய உரையில் பிரெஞ்சு நாட்டு மக்களுக்கு அறிவித்த அதே நேரத்தில், பிரெஞ்சு புரட்சியின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள பாஸ்டில் சதுக்கத்தில் கூடிய மாணவர்கள், சிராக்கைப் பதவியை விட்டு விலகக் கோரி ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர். இச்சட்டத் திருத்தத்தை எவ்வித நிபந்தனையும் இன்றி முழுமையாகத் திரும்பப் பெறக் கோரி ஏப்ரல் 4 அன்று நடந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில், பிரான்சு நாடே உறைந்தே போனது. நன்னடத்தைக் காலம் குறித்த புதிய விதிகளை திரும்பப் பெற்றுக் கொள்வதாக அதிபர் சிராக் ஏப்ரல் 10 அன்று அறிவித்த பிறகுதான், எட்டு வாரங்களாகத் தொடர்ச்சியாக நடைபெற்ற போராட்டங்களும், மோதல்களும் முடிவுக்கு வந்தன.

பிரான்சைப் போலவே இந்தியாவிலும் வேலையில்லாத திண்டாட்டம் தலைவிரித்தாடி வருகிறது. மத்திய-மாநில அரசுகள் நடைமுறைப்படுத்தி வரும் வேலை நியமனத் தடைச்சட்டம், இந்திய இளைஞர்களின் எதிர்காலத்தை இருட்டாக்கி விட்டது. பிரெஞ்சு அதிபர் சிராக் போலவே பிரதமர் மன்மோகன் சிங்கும் தொழிலாளர் நலச் சட்டங்களைத் திருத்தினால்தான் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் எனக் கதைவிட்டுக் கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட நிலையில் பிரெஞ்சு இளைஞர்களும், உழைக்கும் மக்களும் இணைந்து போராடி அடைந்துள்ள வெற்றி நமது நாட்டு இளைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் புதிய நம்பிக்கையை அளிப்பதாகவே உள்ளது!

● ரஹீம்


படிப்பகம்



## கால்—சென்டர்கள்

# கொத்தடிமைத்தனம் ஒழிவது எப்போது?

"கல்லூரிக் கல்வியும் ஆங்கிலம் பேசும் ஆற்றலும் கொஞ்சம் கணினி அறிவும் இருந்தால் கால் சென்டர்களில் ஆயிரமாயிரமாய் சம்பாதிக்கலாம்; வேலை செய்து கொண்டே படித்து மேலும் மேலும் முன்னேறலாம்; அமெரிக்க வாழ்க்கையை இங்கேயே வாழலாம்; அதிருஷ்டமிருந்தால் அமெரிக்காவுக்கே போய்விடலாம்'' என்று பத்திரிகைகள் தொடர்ந்து பிரச்சாரம் செய்கின்றன. ''கால் சென்டர்கள்தான் நவீன இந்தியாவின் கோயில்கள்'' என்று மொத்தப் பொருளாதாரத்தையும் அந்தத் திசை நோக்கி நகர்த்தி வருகிறது மன்மோகன் சிங் அரசு. வேறு வேலை வாய்ப்புகள் ஏதும் இல்லாத நிலையில் படித்த இளைஞர்களின் ஒரே போக்கிடம் கால் சென்டர்கள் அல்லது தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள்தான் என்ற நிலைமை உருவாக்கப்பட்டு வருகிறது.

பெங்களூர் கால் சென்டரில் பணியாற்றிய பிரதீபா என்ற பெண், அவரை அழைத்துச் சென்ற வாகன ஓட்டுனரால் பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் கால் சென்டர் சொர்க்கங்களின் ஒரு இருண்ட பகுதியை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது.

இரண்டு மாதங்களுக்கு முன் சென்னை டைடல் பார்க் கட்டிடத்தின் மேல் மாடியிலிருந்து குதித்து ஒரு கணினிப் பொறியாளர் தற்கொலை செய்து கொண்டார். அந்த இளைஞர் பற்றி பல கிசுகிசுச் செய்திகள் வெளிவந்தனவேயொழிய, உண்மை விவரங்கள் வெளியாகவே இல்லை.

இந்த வரிசையில், சென்னை வடபழனியில் இயங்கும் ஒரு கால் சென்டரில் மாதம் 8000 ரூபாய் சம்பளத்திற்கு டிசம்பர் மாதம் முதல் பணியிலமர்த்தப்பட்ட 15 ஊழியர்களுக்கு இரண்டு மாதமாகச் சம்பளம் தரப்படவில்லை. இரவு 9 மணி முதல் காலை 6 மணி வரை இரண்டரை மாதமாகச் செய்த வேலைக்குச் சம்பளம் கேட்டபோது, ஊழியர்களை ஆபாசமாகத் திட்டியதுடன், பெண் ஊழியர்களைப் படுக்கைக்கு அழைத்திருக்கிறான் அந்த கால் சென்டரின் முதலாளி மஜீத். இது குறித்து வடபழனி போலீசில் புகார் கொடுத்தும் நடவடிக்கை ஏதும் எடுக்காததால், கமிசனரிடம் புகார் கொடுத்திருக்கிறார்கள் அந்த ஊழியர்கள்.

தொழிற்சங்க உரிமைகளோ, தொழிலாளர் நலச் சட்டங்களோ தீண்ட முடியாத கால் சென்டர் எனும் கொத்தடிமைக் கூடாரத்திலிருந்து இப்படியொரு போராட்டக் குரல் எழுந்துள்ளது மிகவும் அரிதானது. அடிமைத்தனத்தைத் தவிர்க்கவியலாததாகக் கருதி ஏற்கும்படி மூளைச்சலவை செய்யப்பட்டிருக்கும் தகவல் தொழில்நுட்பத் துறை ஊழியர்கள் மத்தியில், இத்தகையதொரு துணிவு வெளிப்பட்டிருப்பதும் அதிசயமானது என்பதால் அவர்களை நேரில் சென்று சந்தித்தோம்.

கடந்த ஒரு ஆண்டாக சென்னை வடபழனியில் செயல்பட்டு வருகிறது **ஐ.கியூ. நெட்** என்ற நிறுவனம். பல்வேறு விதமான வணிக - அலுவலகப் பணிகளை குத்தகைக்கு எடுத்துச் செய்யும் இந்த பி.பி.ஓ. **(Business Process Outsourcing)** நிறுவனத்திற்கு மதுரையில் ஒரு கிளையும் ஆந்திராவில் இரு கிளைகளும் உள்ளன. பல்வேறு அமெரிக்க நிறுவனங்களுடைய பணிகள், மொரிசியஸ் நாட்டிலுள்ள ஒரு பினாமிக் கம்பெனிக்கு குத்தகைக்கு விடப்பட்டு, அங்கிருந்து அந்தப் பணி சென்னையில் உள்ள இந்த நிறுவனத்திற்கு உள்குத்தகைக்கு மாற்றி விடப்படுகிறது. இங்கிருந்து ஆந்திராவுக்குத் துணைக் குத்தகை! மஜீத் என்ற முதலாளியால் நடத்தப்படும் இந்நிறுவனம் சென்ற ஜனவரி மாதம் 30 பேரைப் புதிதாகப் பணியிலமர்த்தியது. ''5 முதல் 7 நாட்கள் பயிற்சிக் காலம் - பயிற்சிக் காலத்திற்கே ஊதியம் உண்டு - அதற்குப் பின் வேலை - **You'll go live** - அனுபவி ராஜா அனுபவி'' என்று கூறிப் பணியில் அமர்த்தியிருக்கின்றனர்.

இரவுப் பணிக்கு வரும் ஊழியர்களை அழைத்து வருவதற்கும், பணி முடிந்தபின் கொண்டு விடுவதற்கும் வாகனம் ஏற்பாடு செய்ய வேண்டியது நிறுவனத்தின் பொறுப்பு. ஆனால், வாகன வசதி எதுவும் செய்யப்படாததால், தம் சொந்தச் செலவிலேயே இவர்கள் அனைவரும் வேலைக்கு வந்து சென்றிருக்கின்றனர்.

இரவு முழுவதும் தொடர்ச்சியாகக் கண் விழித்து வேலை செய்யும் ஊழியர்களுக்கு ஓரிரு முறை தேநீர் வழங்கப்படவேண்டும். அதுவும் கிடையாது. ஆண் ஊழியர்களின் துணையுடன் நள்ளிரவில் இரண்டு மூன்று முறை தாங்களே தேநீர்க்கடை தேடி சென்று வந்திருக்கிறார்கள் பெண்கள்.

''பந்தா''வான நட்சத்திர விடுதியில் நேர்முகத் தேர்வு. அலுவலகமோ எலியும் கரப்பானும் கொசுவும் குடியிருக்கும் கூடாரம். அத்தனைக் கொடுமைகளையும் சகித்துக் கொண்டு ஒன்றரை மாதம் மிகவும் விசுவாசமாக உழைத்திருக்கிறார்கள் அந்த ஊழியர்கள். ஆனால், யாருக்கும் வேலை நியமன உத்தரவே தரப்படவில்லை. கேட்கும் போதெல்லாம் இதோ அதோ என்று இழுத்தடித்திருக்கின்றனர்.

இந்தப் போராட்டத்திற்காக, ஊழியர்களைப் பழிவாங்கும் நோக்கத்தில் இவர்களுடன் ஒன்றாக வேலைக்கு அமர்த்தப்பட்ட 4 வடமாநில இளைஞர்களுக்கு நியமன உத்தரவு வழங்கப்

www.padippakam.com

படவில்லை. மற்ற ஊழியர்களுக்கு நியமன உத்தரவு கிடைத்ததேயன்றி சம்பளம் வரவில்லை. இரண்டு மாதங்கள் முடிந்து பிப்ரவரி தொடங்கியும் சம்பளம் வராமல் போகவே 30 மணி நேரம் உள்ளிருப்புப் போராட்டம் தொடங்கியிருக்கின்றனர்.

பிப்ரவரி 10-ஆம் தேதியன்று முழுச் சம்பளத்தையும் போக்குவரத்துச் செலவையும் கொடுத்து விடுவதாகச் சொல்லியிருக்கிறான் முதலாளி மஜீத். அதை எழுதிக் கொடுக்குமாறு ஊழியர்கள் கேட்டவுடன் ஆத்திரமடைந்திருக்கிறான். பிப்ரவரி 9-ஆம் தேதி இரவு 11.30 மணிக்கு பெண் ஊழியர்கள் உள்ளிட்ட அனைவரையும் உடனே வெளியேறுமாறு மிரட்டியிருக்கிறான் லாங்மத் என்ற அதிகாரி. ''மரியாதையாக வெளியே போகாவிட்டால் ரவுடிகளை வைத்து துரத்துவோம், அல்லது போலீசைக் கூப்பிடுவோம்'' என்று அவன் கூறியதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த ஊழியர்கள் முதலாளி மஜீதை தொலைபேசியில் அழைத்திருக்கின்றனர். அவனுடைய ஆபாசப் பேச்சைக் கேட்ட பெண்கள் போலீசுக்குப் போவோம் என்று சொன்னதும் ''உன்னால் ஆனதைப் பார். எனக்கு டி.ஐ.ஜி.யையே தெரியும்'' என்று மிரட்டியிருக்கிறான் மஜீத்.

அதன் பிறகு வடபழனி காவல் நிலையம், எழும்பூர் கூடுதல் கமிசனர், தி.நகர் துணைக் கமிசனர், மாநகர கமிசனர் என்று நடையாய் நடக்கிறார்கள் ஊழியர்கள். ''எங்களுக்குச் சம்பளமே வராவிட்டாலும் பரவாயில்லை. பெண்களிடம் ஆபாசமாகப் பேசியதற்காகவும் மிரட்டியதற்காகவும் மஜீத் மீது வழக்கு பதிவு செய்யுங்கள்'' என்றுகூட போலீசிடம் மன்றாடிப் பார்த்துவிட்டனர் ஊழியர்கள். ஆனால், இதுவரை முதல் தகவல் அறிக்கை கூடப் பதிவு செய்யப்படவில்லை. மஜீதை போலீசு விசாரிக்கவும் இல்லை.

''இந்தியாவுக்கு அந்நியச் செலவாணியை அள்ளித்தரும் தகவல் தொழில்நுட்பத் துறையில் கலகம் செய்து நாட்டின் பொருளாதாரத்தையும் தேசிய வருவாயையும் சீர்குலைக்கிறீர்கள். இது சர்வதேசக் குற்றம். உங்கள் புகைப்படங்களை நாஸ்காமிற்கு (Nasscomm - கணினி முதலாளிகளின் கூட்டமைப்பு) அனுப்பி அதன் இணையத் தளத்தில் வெளியிட்டு உங்களுக்கு இந்தியாவில் எங்குமே வேலை கிடைக்காமல் செய்து விடுவேன்'' என்று போலீசு நிலையத்திலேயே வைத்து ஊழியர்களை மிரட்டியிருக்கிறார் மஜீதின் வக்கீல்.

**8 மணி நேர வேலை என்று சொல்லிவிட்டு 12 முதல் 15 மணிநேரம் வேலை வாங்குவது, மிகுதி நேரப் பணிக்கு ஊதியம் தருவதில்லை என்பதையே விதியாக வைத்திருப்பது, விடுமுறை நாட்களை ரத்து செய்வது, விடுப்பு எடுத்தால் வேலை போய்விடும் என்று அச்சுறுத்துவது, சம்பளம் - பணி நிலைமைகள் பற்றி சக ஊழியருடன் பேசினாலே வேலைநீக்கம் என்று விதிமுறை வைத்திருப்பது - என்பவையெல்லாம் கால் சென்டர்கள் எனப்படும் கொத்தடிமைக் கூடாரங்களின் பொது விதிகள்.**

இரண்டரை மாத உழைப்புக்கு ஊதியம் கிடைக்காமல் ஏமாற்றப்பட்டு, ஆபாச வசவுகளால் அவமானப்படுத்தப்பட்டு, தங்கள் பொறியியல் பட்ட, கணினிப் பட்டச் சான்றிதழ்களையும் இந்த பிளேடு கம்பெனியிடம் பறிகொடுத்துவிட்டு, போலீசின் கட்டைப் பஞ்சாயத்தில் அலைக்கழிக்கப்பட்டு, தவித்து நிற்கிறார்கள், பரிதாபத்திற்குரிய இந்த ஊழியர்கள்.

உள்ளே நுழைந்தவுடனே ரூபாய் 8000, 10,000 என்று சம்பளத்தை வாரிக் கொடுக்கும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் மத்தியில் ஐ.கியூ போன்ற நிறுவனங்கள் ஒரு விதிவிலக்கு என்று நீங்கள் நினைக்கலாம். விதிவிலக்காகவே இருக்கட்டும். ஆனால், இதற்குச் சட்டப்படி நிவாரணம் வழங்கும் இடம் எது என்பதுதான் கேள்வி.

இந்தக்கேள்வி ஐ.கியூ நெட் என்ற பிளேடு கம்பெனிக்கு மட்டுமல்ல, பத்தாயிரம் பதினைந்தாயிரம் சம்பளம் கொடுக்கும் பன்னாட்டு நிறுவனங்களின் கால் சென்டர்களுக்கும் பொருந்தும்.

குறிப்பிட்ட சம்பளம் தருவதாகச் சொல்வது . ஆனால், அதைவிடக் குறைத்துத் தருவது, 8 மணி நேர வேலை என்று சொல்லிவிட்டு 12 முதல் 15 மணிநேரம் வேலை வாங்குவது, மிகுதி நேரப் பணிக்கு ஊதியம் தருவதில்லை என்பதையே விதியாக வைத்திருப்பது, விடுமுறை நாட்களை ரத்து செய்வது, விடுப்பு எடுத்தால் வேலை போய் விடும் என்று அச்சுறுத்துவது, சம்பளம் - பணிநிலைமைகள் பற்றி சக ஊழியருடன் பேசினாலே வேலைநீக்கம் என்று விதிமுறை வைத்திருப்பது - என்பவையெல்லாம் கால் சென்டர்கள் எனப்படும் கொத்தடிமைக் கூடாரங்களின் பொது விதிகள்.

வேலை உத்திரவாதம் என்பது இந்தத் துறைக்கே அந்நியமான ஒரு சொல். எத்தனைக் காலம் பணியாற்றியிருந்தாலும் ''நாளை முதல் நீக்கப்படுகிறாய்'' என்று யாரை வேண்டுமானாலும், காரணம் கூறாமலும் விளக்கம் கேட்காமலும் வெளியேற்ற முடியும் என்பதே இந்நிறுவனங்களின் விதி. தொழிற்சங்கம் என்ற சொல்லை இந்நிறுவனங்களின் வளாகத்தில் யாரும் உச்சரிக்கக் கூட முடியாது.

அப்படியொரு சங்கம் இருந்திருந்தால், சம்பள பாக்கி கேட்டு இந்த ஊழியர்கள் போலீசு ஸ்டேசனுக்குப் போயிருக்க வேண்டியதில்லை. ஊதியத்தைப் பெறுவது, பணிநீக்கத்தை ரத்து செய்வது, முறைகேடாகப் பேசிய முதலாளியைச் சந்திக்கு இழுப்பது என அனைத்தையும் ஒரு தொழிற்சங்கம் செய்திருக்க முடியும்.

ஆனால், தகவல் தொழில் நுட்பத் துறையில் தொழிற்சங்கம் அமைப்பதென்பதை பன்னாட்டு நிறுவனங்களுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கை போலச் சித்தரிக்கிறது அரசு. இராணுவம், போலீசுக்கு அடுத்தபடியாக சங்கம் அமைக்கக் கூடாத துறை, 'தகவல் தொழில்நுட்பத் துறை' என்பது *எழுதப்படாத விதியாக* இருக்கிறது. செய்த வேலைக்குச் சம்பளம் கொடு என்று கேட்ட ஊழியர்களை ''தேச விரோதிகள், சர்வதேசக் குற்றவாளிகள்'' என்றெல்லாம் மஜீதின் வழக்குரைஞர் வசைபாடியது வெறும் திமிர்ப் பேச்சல்ல, அதுதான் அரசாங்கத்தின் கொள்கை.

அமெரிக்க சிலிக்கான் பள்ளத்தாக்கின் கணினித்துறை ஊழியர்கள் ''சிலிக்கான் பள்ளத்தாக்கின் தோட்டத் தொழிலாளர்கள்'' என்று அழைக்கப்படுகிறார்கள். அது மிகையல்ல, உண்மை. இந்த உண்மையை தகவல் தொழில்நுட்பத் துறை ஊழியர்கள் உணரவேண்டும். கொத்தடிமைத்தனத்திற்கு எதிராகவும், பணிப்பாதுகாப்பு - உரிமைகளுக்காகவும் தொழிற்சங்கம் அமைப்பதற்கான முயற்சிகளில் உடனே இறங்க வேண்டும்.

● தனபால்


படிப்பகம்

www.padippakam.com

# ஒரு நதியின் கண்ணீர்

## நர்மதைச் சமவெளியைப் பாதுகாக்க பழங்குடியின மக்கள் நடத்திவரும் போராட்டம், சட்டபூர்வ-அமைதிவழிப் போராட்டங்களின் சாத்தியப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்கி விட்டது.

**ம**த்தியப் பிரதேசம், குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களின் வழியே ஓடும் நர்மதை மற்றும் அதன் கிளை ஆறுகளில் 30 பெரிய, 135 நடுத்தர மற்றும் 3000 சிறு அணைக்கட்டுகள் கட்டி, ம.பி., குஜராத், மகாராஷ்டிரா, இராசஸ்தான் ஆகிய மாநிலங்களுக்குப் பாசன - குடிநீர் வசதிகள் உருவாக்கித் தரும் திட்டம் 1980-களில் தீட்டப்பட்டது. இத்திட்டத்தில் சர்தார் சரோவர் மற்றும் நர்மதா சாகர் என்ற இரு அணைகள்தான் முக்கியமானவை.

குஜராத்தில் சர்தார் சரோவர் அணையைக் கட்டுவதற்காக மட்டும் இதுவரை ஏறத்தாழ 181 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். அக்கிராமங்கள் அனைத்தும் அந்த அணையில் தேக்கப்படும் நீரில் மூழ்கிவிட்டன. இந்த அணை தற்பொழுதுள்ள 110 மீட்டர் உயரத்தில் இருந்து 121.92 மீட்டர் உயரத்திற்கு எழுந்து நிற்கும்பொழுது, மேலும் 117 கிராமங்கள் நீரில் மூழ்கிவிடும் என்றும்; ஏறத்தாழ 35,000-க்கும் அதிகமான குடும்பங்கள் அக்கிராமங்களில் இருந்து அப்புறப்படுத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

சர்தார் சரோவர் அணையால் தங்களின் கிராமங்களை, நிலங்களை இழந்துவிட்ட நர்மதை சமவெளியைச் சேர்ந்த பழங்குடியின மக்கள், தங்களின் மறுவாழ்க்கைக்காக நர்மதை பாதுகாப்பு இயக்கம் எனும் அமைப்பின் கீழ் அணி திரண்டு, கடந்த இருபது ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர்.

இந்த அணை 90 மீட்டர் உயரத்தை அடைந்த பொழுது, இனியும் அணையின் உயரத்தை அதிகரிக்கக் கூடாது எனக் கோரி நர்மதை பாதுகாப்பு இயக்கத்தினர் 1995-ஆம் ஆண்டு உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடுத்தனர். விசாரணை என்ற போர்வையில் வழக்கை ஐந்து ஆண்டுகள் இழுத்தடித்த உச்சநீதி மன்றம், 2000-ஆம் ஆண்டில் அணையின் உயரத்தை அதிகரிக்க அனுமதி வழங்கித் தீர்ப்பளித்தது.

இப்பிரச்சினை தொடர்பாக 2002-ஆம் ஆண்டில் உச்சநீதி மன்றம் வழங்கிய மற்றொரு தீர்ப்பில், ''அணையின் உயரத்தை ஐந்து ஐந்து மீட்டராக உயர்த்தலாம்; அணையின் உயரத்தை அதிகரிப்பதற்கு முன், அதிகரிக்கப்படப் போகும் உயரத்தால் பாதிக்கப் படக்கூடிய மக்களுக்கு மறுவாழ்வு அளித்திருக்க வேண்டியது கட்டாயமாகும்'' எனக் குறிப்பிட்டது.

மேலும் இத்தீர்ப்பின்படி, அணையின் உயரத்தை அதிகரிப்பது - மறுவாழ்வு அளிப்பது ஆகியவற்றில் ஏதாவது பிரச்சினை உருவாகி, அப்பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் போகும் இக்கட்டான, இழுபறி நிலை உருவாகுமானால், அதில் தலையிட்டுத் தீர்க்கும் முழு அதிகாரமும் இந்தியப் பிரதமருக்கு வழங்கப்பட்டது.

குஜராத் அரசு, கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் அணையின் உயரத்தை 90 மீட்டரில் இருந்து 110 மீட்டராகக் கிடுகிடுவென உயர்த்தி விட்டது. ஆனால், அணை உயர்த்தப்பட்டதால் வாழ்விழந்த பழங்குடி இன மக்களோ, எவ்வித மறுவாழ்வு உதவியும் கிடைக்காமல் நடுத்தெருவில் நிற்கின்றனர். நர்மதை பாதுகாப்பு இயக்கம், இப்பழங்குடி மக்களின் அவலத்தை பலமுறை மைய அரசிடம் முறையிட்டும் கூட, அவையனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்காகிப் போனது.

இந்த நிலையில், நர்மதை கட்டுப்பாடு ஆணையம் கடந்த மார்ச் மாதம் முதல் வாரத்தில் அணையின் 110 மீட்டர் உயரத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் மறுவாழ்வும், நிவாரணமும் வழங்கப்பட்டு விட்டதாகக் கூறிவிட்டு, அணையின் உயரத்தை 121 மீட்டர் அளவிற்கு உயர்த்திக் கொள்ள குஜராத் அரசிற்கு அனுமதி அளித்தது. இந்தத் திமிர் பிடித்த ஆணையை எதிர்த்து, நர்மதை பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் மேதா பட்கரும், அவ்வியக்கத்தைச் சேர்ந்த இரு பழங்குடியினரும் உண்ணாவிரதப் போராட்டத்தை மார்ச் இறுதியில் தில்லியில் தொடங்கினர்.

பாதிக்கப்பட்ட மக்களின் கோரிக்கையை நிறைவேற்றுவதைவிட, இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை எப்படியாவது தடுத்து நிறுத்திவிடும் முயற்சியில் படுதீவிரமாக இறங்கியது மன்மோகன் சிங் அரசு. மேதா பட்கர், தங்களின் கோரிக்கை நிறைவேறாமல் உண்ணாவிரதத்தைக் கைவிட மறுக்கவே, ஏப்ரல் 5 அன்று நள்ளிரவில் 1,000-க்கும் அதிகமான போலீசாரை ஏவி, அவரைக் குண்டுகட்டாகத் தூக்கி வந்து, அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழக மருத்துவமனையில் ''சிறை'' வைத்தது. மேதா பட்கர் மீது தற்கொலை முயற்சி வழக்கு போடப்பட்டதோடு, நர்மதை பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த தொண்டர்கள் மீது ஆறு பிரிவுகளில் கிரிமினல் வழக்குகள் தொடரப்பட்டன.

மைய அரசின் இந்த மிரட்டலுக்குப் பணியாமல், மேதா பட்கர் மருத்துவமனையிலேயே உண்ணாவிரதத்தைத் தொடர்ந்தார். நர்மதை பாதுகாப்பு இயக்கத்தைச் சேர்ந்த பழங்குடியின மக்கள், எழுத்தாளர் அருந்ததி ராய் உள்ளிட்ட பல்வேறு அறிவுஜீவிகள், ஜனநாயக இயக்கங்களின் ஆதரவோடு நர்மதை கட்டுப்பாடு ஆணையத்தின் உத்தரவை ரத்து செய்யக் கோரி, ''தர்ணா'' போராட்டத்தை நடத்தி வந்தனர்.

மன்மோகன் சிங் அரசு தனது ''மனித முகமூடி''யைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, மத்திய நீர் வளத் துறை அமைச்சர் சைபுதீன் சாஸ் தலைமையில் ஒரு அமைச்சர் குழுவை, மறுவாழ்வுப் பணிகளை ஆய்வு செய்ய அனுப்பி வைத்தது. ம.பி. மாநிலத்தில் ஆறு இடங்களை மட்டும் பார்வையிட்ட இக்குழு, அந்த இடங்களில் மறுவாழ்வுப் பணிகள் மயிரளவிற்குக் கூட நடக்கவில்லை என்ற உண்மையை ஒப்புக் கொண்டது.

இந்த நிலையில், நர்மதை பாதுகாப்பு இயக்கத்தினர் கோரியபடி நர்மதை கட்டுப்பாடு ஆணையத்தின் உத்தரவை ரத்து செய்வதுதான் நியாயமான நடவடிக்கையாக இருக்க முடியும்.

www.padippakam.com

ஆனால், இராசஸ்தான், குஜராத், ம.பி. மாநில பா.ஜ.க. முதல்வர்கள், அணையின் உயரத்தை அதிகரிக்கும் கட்டுமானப் பணிகளை நிறுத்த மறுத்துவிட்டனர். இந்தச் சிக்கலை தீர்க்க வேண்டிய பொறுப்பில் உள்ள பிரதமர் மன்மோகன் சிங்கோ, பிரச்சினையை மீண்டும் உச்சநீதி மன்ற விசாரணைக்குத் தள்ளி விட்டுவிட்டுத் தப்பித்துக் கொண்டார்.

உச்சநீதி மன்றமோ, தான் அளித்த தீர்ப்புக்குத் தானே நியாயமாக நடந்து கொள்ள மறுத்து விட்டது. ஒருபுறம், பிரச்சினையை மீண்டும் மன்மோகன் சிங்கிடம் தள்ளிவிட்டு, தனது பொறுப்பைத் தட்டிக் கழித்தது. இன்னொருபுறமோ, அணையின் கட்டுமானப் பணிகளை நிறுத்த மறுத்துவிட்டு, அடுத்த மூன்று மாதங்களுக்குள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு உதவிகளைக் கொடுத்துவிட வேண்டும் என அறிவுரை வழங்கியது.

ஏழை மக்களைப் பந்தாடும் ஆளும் கும்பலின் இந்த விளையாட்டால் ஏமாற்றமடைந்த நர்மதை பாதுகாப்பு இயக்கத்தினர் 21 நாட்கள் கழித்துத் தங்களின் போராட்டத்தை முடித்துக் கொண்டனர். தங்களின் போராட்டத்தால், தங்களின் பிரச்சினையை இந்தியா முழுவதும் தெரிவித்து விட்டோம் என்ற திருப்தியைத் தவிர, வேறு எதனையும் பெற முடியாமல் அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.

•••

இந்தப் போராட்டத்தை குஜராத் மக்களுக்கு எதிரானதாகச் சித்தரித்திருந்தார் மோடி. ஆனால், உண்மையென்ன? சர்தார் சரோவர் அணையில் தற்பொழுது தேக்கப்படும் தண்ணீரின் ஒரு பகுதியை எடுத்து, 3178 கிராமங்களுக்குக் குடிநீர் விநியோகிக்கப் போவதாகப் பீற்றிக் கொண்டு, அதற்கு குஜராத் மாநில பா.ஜ.க. அரசு 464.77 கோடி ரூபாய் செலவழித்தது. நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் பாதியளவு கிராமங்களுக்குக் கூட இன்னும் குடிநீர் கிடைக்கவில்லை. அப்படியென்றால், அந்தத் தண்ணீரெல்லாம் எங்கே மாயமாய் போகிறது?

ஒருபுறம் குடிநீர் வழங்குவதை மட்டுமின்றி, ஆறுகளையே தனியார்மயப்படுத்தும் பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்திக் கொண்டு, இன்னொருபுறம் சர்தார் சரோவர் அணையை மக்களின் குடிநீர் தேவைக்காகக் கட்டுகிறோம் என்பது நம்பக்கூடியதாக உள்ளதா?

நாடெங்குமே விவசாயம் நசிவடைந்து, விவசாயிகள் நிலத்தைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கும் பொழுது, சர்தார் சரோவர் அணையால், எந்த விவசாயி பலன் அடையப் போகிறார்? ஏழை விவசாயியா? இல்லை, விவசாயத்தில் புகுந்துள்ள நவீன பணக்கார விவசாயிகளும், தரகு முதலாளித்துவ நிறுவனங்களுமா?

•••

இந்தப் போராட்டம், மக்களின் பெயரால் போடப்படும் வளர்ச்சித் திட்டங்களின் பின் மறைந்துள்ள கோர முகத்தை மட்டும் அம்பலப்படுத்தவில்லை. மக்கள், தங்கள் உரிமைகளுக்காகச் சட்டபூர்வமான, அமைதியான வழிகளில்கூட இனி போராட முடியுமா? அதை ஆளுங்கும்பல் சகித்துக் கொள்ளுமா? என்ற கேள்விகளையும் எழுப்பியிருக்கிறது.

காந்திய வழியில் உண்ணாவிரதம் இருந்த மேதா பட்கரை திகார் சிறையில் அடைத்தால் தனது ஜனநாயக விரோதத் தன்மை அம்பலமாகி விடும் என்பதால்தான், அவரை மருத்துவமனையில் ''சிறை'' வைத்தது, மைய அரசு. அருந்ததி ராய் போன்ற பிரபலமான புள்ளிகளைத் தவிர, தனது இயக்கத்தைச் சேர்ந்த தொண்டர்களைச் சந்திப்பதற்குக் கூட மேதா பட்கர் அனுமதிக்கப்படவில்லை. மேதா பட்கரோடு கைது செய்யப்பட்ட 300 பேர் அவரைப் போல ''மருத்துவமனைக்கு'' அழைத்துச் செல்லப்படவில்லை.

இந்தப் போராட்டம் நடந்து கொண்டிருந்த பொழுதே, குஜராத் முதல்வர் மோடி, ''சர்தார் சரோவர் அணையால் பாதிக்கப்படுபவர்களைப் பற்றி நான் அதிகம் கவலைப்படுவதில்லை'' எனத் திமிரோடு சொன்னார்.





காங்கிரசின் இரட்டை வேடம்: மேதா பட்கரைச் சமாதானப்படுத்துவதற்கு மைய நீர்வள அமைச்சர் சைஃபுதீன் சாஸை (இடமிருந்து மூன்றாவது) அனுப்பி நாடகமாடிய மன்மோகன் சிங் (மேல்படம்), இன்னொருபுறம் தன்னைச் சந்தித்த குஜராத் காங்கிரசு - பா.ஜ.க. எம்.பி.க்களிடம் அணையின் உயரத்தை அதிகரிக்கும் கட்டுமானத் திட்டத்தைத் தடை செய்ய மாட்டேன் என வாக்குறுதி கொடுத்தார்.

படிப்பகம்

www.padippakam.com

இது பா.ஜ.க.வின் பாசிச முகம் மட்டுமல்ல; காங்கிரசு அரசின் 'மனித முகமும்' இதுதான். உள்துறை அமைச்சர் சிவராஜ் பாட்டீல், ''பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு கொடுக்கக் கூடிய அளவிற்கு அரசிடம் சக்தி இல்லை'' என்றார். இப்படிப்பட்ட பாசிசப் பேர்வழிகளிடம் மறுவாழ்வு கொடுங்கள் என எத்தனை முறை கெஞ்ச முடியும்?

பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக மேதாபட்கர் நடத்திய உண்ணாவிரதப் போராட்டத்துக்கு எதிராக மோடியின் 51 மணி நேர உண்ணாவிரத எதிர்போராட்ட வக்கிரக் கூத்தைக் கண்டிக்க முன்வராத உச்சநீதி மன்றம், நர்மதை இயக்கத்தினரின் சட்டபூர்வ போராட்டத்தை ''ஆத்திரமூட்டக் கூடிய நடவடிக்கை'' என்றது. இது போன்ற போராட்டங்கள் ''நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு ஆபத்தாக முடியும்'' எனப் பீதியூட்டியது.

''மக்கள் கூடும் இடங்களில் பொதுக் கூட்டமோ ஆர்ப்பாட்டமோ நடத்தக் கூடாது; முக்கிய சாலைகளின் வழியே ஊர்வலம் போகக் கூடாது; அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தங்களில் ஈடுபடக் கூடாது. ''பந்த்'' போன்ற போராட்டங்கள் சட்டவிரோதமானவை'' என ஏற்கெனவே பல சட்டபூர்வ ஜனநாயக உரிமைகளை நீதிமன்றங்கள் தட்டிப் பறித்ததை நினைத்துப் பார்த்தால், உச்சநீதி மன்றத்தின் பீதியூட்டல் நமக்கு வியப்பைத் தராது.

தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் நாடு மறுகாலனியாக்கப்படுவதற்கு ஏற்றவிதத்தில் சட்டபூர்வ உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்பட்ட பின், ''சட்ட விரோதமான'' வழிகளில் போராடுவதைத் தவிர வேறு வழி என்ன இருக்கிறது?

பணி பாதுகாப்புக்காகப் போராடிய ஹோண்டா தொழிலாளர்கள், அரியானா போலீசாரால் இரத்தம் சொட்ட சொட்ட அடிக்கப்பட்டனர்.

போஸ்கோ என்ற பன்னாட்டு நிறுவனத்திற்காக தங்களின் நிலங்களை இழக்க முடியாது எனப் போராடிய ஒரிசாவின் பழங்குடி இன மக்கள் ஒரிசா போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மக்களின் போராட்டங்களை எதிர்க்கும் எதிரிகள் ஆயுதபாணியாக நிற்கும் பொழுது, மக்களும் தங்களின் தற்காப்புக்காக ஆயுதம் ஏந்தித் தானே தீர வேண்டும். மயிலே மயிலே என்றால் இறகு போடாது என்பது வெற்று பழமொழி அல்லவே!

● சுடர்

### தேர்தல் புறக்கணிப்பு:

# அடிப்படை உரிமையா? தேசவிரோதக் கொடுஞ்செயலா?

தமிழகமெங்கும் நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகள் தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சார இயக்கத்தை வீச்சாக நடத்தி வருகின்றன. துண்டுப் பிரசுரம், தெருமுனைக் கூட்டங்கள், பொதுக்கூட்டம்-கலைநிகழ்ச்சிகள் மூலமாகவும், தேர்தல் புறக்கணிப்பு பிரச்சார இயக்கத்தையொட்டி வெளியிடப்பட்ட ''ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!'' என்று தலைப்பிடப்பட்ட சிறு வெளியீட்டை பல்லாயிரக் கணக்கில் மக்களிடம் பிரச்சாரம் செய்து விநியோகித்தும், நாடாளுமன்ற - சட்டமன்ற போலி ஜனநாயகத் தேர்தல் நாடகத்தை அம்பலப்படுத்தி வருகின்றன. உழைக்கும் மக்களின் பேராதரவோடு புரட்சிப் பாதையில் இப்பிரச்சார இயக்கம் பீடு நடைபோட்டு முன்னேறி வருகிறது.

ஒசூர், காங்கேயம், நாமக்கல் அருகேயுள்ள காளப்பநாயக்கன்பட்டி, சென்னை, விருத்தாசலம் ஆகிய இடங்களில் தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சார பொதுக் கூட்டம் - கலை நிகழ்ச்சிகளுக்கு அனுமதியளித்த போலீசு, அதன் பிறகு தொடர்ச்சியாக பென்னாகரம், திருச்சி, விழுப்புரம் அருகே கெடார், கடலூர், நெய்வேலி என அடுத்தடுத்து அனைத்து இடங்களிலும் பொதுக் கூட்டங்களுக்கு அனுமதி மறுத்து, அரசியல் பிரச்சார உரிமையையும் காலில் போட்டு மிதித்து வருகிறது. ஓட்டுப் போடுவதும், ஓட்டுப் போடாமல் தேர்தலைப் புறக்கணிப்பதும் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமை. ஆனால், தேர்தலைப் புறக்கணிப்பது சட்டவிரோதம் - தேசவிரோதம் என்று புது விளக்கம் தருகிறது போலீசு. ஒசூரில், ஏப்ரல் 17-ஆம் தேதியன்று நடந்த தேர்தல் புறக்கணிப்பு பொதுக் கூட்டம் - கலை நிகழ்ச்சிக்குப் பிறகு, மறுநாள் ஏப்ரல் 18-ஆம் தேதியன்று பு.ஜ.தொ.மு.வைச் சேர்ந்த பரசுராமன், சீனு.இரவிச்சந்திரன் ஆகிய இரு முன்னணித் தோழர்கள் அரசைக் கவிழ்க்க சதி செய்ததாகப் பொய்க் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில்அடைக்கப்பட்டுள்ளனர். ''நக்சலைட் ஊடுருவல்'' என்று போலீசு கொடுத்த செய்தியை பத்திரிகைகள் அப்படியே வாந்தி எடுத்தன.

சென்னையில் தேர்தலைப் புறக்கணித்துப் புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரளுமாறு அறைகூவிய சுவரொட்டிகளை ஒட்டிய இரு தோழர்கள், மதுரையில் துண்டுப் பிரசுரம் விநியோகித்து தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம் செய்த கல்பனா, வீணா ஆகிய இரு பெண் தோழர்கள், வேலூரில் ''ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!'' என்ற சிறு வெளியீட்டை பேருந்துகளில் பிரச்சாரம் செய்து விற்பனை செய்த தோழர் இராவணன் - என அடுத்தடுத்து தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இத்தகைய சட்டவிரோத அடக்குமுறைகள் - அச்சுறுத்தல்களைத் துச்சமாக மதித்து, தேர்தல் புறக்கணிப்பு அரசியல் பிரச்சாரத்தை இப்புரட்சிகர அமைப்புகள் தமக்கே உரிய வீரியத்தோடு தொடர்ந்து நடத்தி வருகின்றன.

தொழிலாளர்களின் வேலைநிறுத்த உரிமை மட்டுமல்ல; இப்போது தேர்தலைப் புறக்கணிக்கும் அடிப்படை ஜனநாயக உரிமைகூட பறிக்கப்பட்டு அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுகிறது. நடப்பது சட்டபூர்வ ஜனநாயக ஆட்சியல்ல; மறுகாலனியாதிக்க பாசிச ஆட்சி என்பதையே இவை மீண்டும் நிரூபித்துக் காட்டுகின்றன. ●




தஞ்சையில்

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

கிறார்கள். ''கட்டுப்பாடு மிக்க கட்சி என்கிறீர்களே, இங்கேயும் கோஷ்டி சண்டைதானா?'' என்று நாம் முகத்தைச் சுளித்தால், ''இது கோஷ்டி சண்டை அல்ல தோழரே! உட்கட்சி ஜனநாயகத்துக்கான உரிமைக் குரல்'' என்று சித்தாந்த விளக்கமளிக்கிறார்கள் இப்போலி கம்யூனிஸ்டுகள்.

''காம்ரேடு''களின் ஜனநாயகத்துக்கான உரிமைக் குரல் மே.வங்கத்தில் எப்படி இருக்கிறது என்று எட்டிப் பார்த்தோம். உரிமைக்காகப் போராடுவதாகக் கூறிக் கொள்ளும் சி.பி.எம். கட்சி, அங்கே ஜனநாயக உரிமையைக் கூட காப்பாற்றிக் கொள்ள முடியாமல் திணறும் பரிதாபக் காட்சி, கோமாளிக் கூத்தாக முடிந்துள்ளது.

தேர்தல் ஆணையம், எந்தக் கட்சியும் சுவரில் எழுதிப் பிரச்சாரம் செய்யக் கூடாது, டிஜிட்டல் பேனர் வைக்கக் கூடாது, இரவு 10 மணிக்கு மேல் ஒலி பெருக்கி வைத்து பிரச்சாரம் செய்யக் கூடாது என்று சர்வாதிகாரமாக உத்தரவு போடுகிறது. எல்லா ஓட்டுக் கட்சிகளும் இச்சர்வாதிகாரத்தை எதிர்க்காமல் மேல்வாயையும் கீழ்வாயையும் மூடிக் கொண்டு கிடக்கின்றன. மற்ற கட்சிகள்தான் பூர்ஷ்வா கட்சிகள்; ஜனநாயகத்துக்காகக் குரலெழுப்பும் சி.பி.எம். கட்சி, தேர்தல் ஆணையத்தின் சர்வாதிகாரத்தை எதிர்த்து மக்களைத் திரட்டிப் போராடலாமே?

'அப்படிச் செய்தால் மக்களிடம் கலக உணர்வு பிறந்துவிடும்; அப்புறம் இந்த மோசடி ஜனநாயகத் தேர்தல் முறையையே மக்கள் எதிர்க்கக் கிளம்பி விடுவார்கள். அப்புறம் நம்ம பொழப்பும் கந்தலாகிவிடும் தோழரே!' என்று தேர்தல் ஆணையத்தின் சர்வாதிகாரத்தைச் சகித்துக் கொண்டு அடங்கிப் போனார்கள். இந்த மோசடி ஜனநாயகத்தையே உலகின் மாபெரும் ஜனநாயகம் என்று இப்போலி கம்யூனிஸ்டுகள் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிக் கொண்டிருக்கும்போது தேர்தல் ஆணையமோ, தனது வானளாவிய அதிகாரத்தைக் கொண்டு, சி.பி.எம். அலுவலகத்தில் ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளனவா என்று ''ரெய்டு'' நடத்தி அடாவடித்தனம் செய்கிறது. ஆனாலும் இந்த 'ஜனநாயகக் காவலர்கள்' தேர்தல் ஆணையத்தின் சர்வாதிகாரத்தையோ, அடாவடி - அத்துமீறல்களையோ எதிர்த்துப் போராட முன்வரவில்லை. மாறாக, தேர்தல் ஆணையத்துக்கு இப்படிச் செய்ய அதிகாரம் உண்டா, இல்லையா என்று மயிர் பிளக்கும் வாதங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்.



தேர்தல் நிதியளிப்புக் கூட்டத்தில் தனக்கு அணிவிக்கப்பட்ட பணநோட்டு மாலையால் பெருமிதம் கொள்ளும்

''ஏன் இப்படி?'' என்று கேட்டால், ''இதெல்லாம் ஒரு டேக்டிக்ஸ் (தந்திரம்) தோழரே! நாங்கள் அமைதியாக இருப்பதாகத் தோன்றினாலும் வேறு வழியில் போராடி தேர்தல் ஆணையத்தின் முகத்தில் கரிபூசி விட்டோம் தோழரே!'' என்கிறார்கள் சி.பி.எம். கட்சிப் பிரமுகர்கள். அப்படி என்ன போராட்டம் நடத்தியுள்ளார் என்று பார்த்தால், தமது கோழைத்தனம் அம்பலப்படாமல் இருக்க, தாங்கள் ஏதோ தந்திரமாகப் போராடுவதாகக் காட்டிக் கொண்டு ஊர் முழுக்க இருக்கிற ஆடு, மாடு, கோழி, நாய் என்று ஒரு பிராணியையும் விடாமல் விரட்டிப் பிடித்து தமது தேர்தல் சின்னத்தை வரைந்து தள்ளிவிட்டார்கள். ''பார்த்தீங்களா, இப்ப தேர்தல் கமிஷனால என்ன பண்ண முடியும்?'' என்று பெருமிதம் கொள்கிறார்கள்.

கட்சித் தொண்டர்களோ தேர்தல் பிரச்சாரம் என்ற பெயரில் தமது தலை முடியை கட்சி சின்னம் கொண்டதாக ''கிராப்'' வெட்டிக் கொண்டு கால்நடையாகத் திரிகிறார்கள். பாமர மக்களிடம் கட்சியின் தேர்தல் சின்னத்தைப் பிரபலப்படுத்தும் நூதனப் பிரச்சாரம் என்று கட்சித் தலைவர்கள் இதை வரவேற்று ஆதரிக்கிறார்கள். ஆனாலும் எந்த சி.பி.எம். தலைவரும் இப்படி ''கிராப்'' வெட்டிக் கொண்டு பிரச்சாரம் செய்யவில்லை. தொண்டர்களுக்கு மட்டும்தான் இப்படி கோமாளித்தனமாகத் திரிவதற்கு கட்சியில் 'சுதந்திரம்' வழங்கப்பட்டுள்ளது.

மக்களின் கரங்களில் அதிகாரத்தைக் குவிக்கும் ஜனநாயகத்துக்காக, நேபாளத்தில் கம்யூனிஸ்டுகள் மக்களைத் திரட்டி வீதிகளிலே போராடுகிறார்கள். மே.வங்கத்திலோ ஓட்டுச் சீட்டு ஜனநாயகத்துக்காக சி.பி.எம். கட்சியினர் ''கிராப்'' வெட்டிக் கொண்டு கோமாளித்தனமாகத் திரிகிறார்கள். இதிலே யார் கம்யூனிஸ்டுகள் என்பது சொல்லாமலேயே விளங்கும்.

இதர ஓட்டுக் கட்சிகளைப் போலவே பணநோட்டு மாலை, மலர் கிரீடம், கோஷ்டிச் சண்டை, கட்சிச் சின்னம் கொண்ட ''கிராப்'', தேர்தல் ஆணையத்தின் சர்வாதிகாரத்துப் பணிந்துபோகும் கோழைத்தனம் என எல்லாவற்றிலும் ஒன்பது பொருத்தமுள்ள இப்போலி கம்யூனிஸ்டுகளுக்கும் மற்ற ஓட்டுப் பொறுக்கி பிழைப்புவாதிகளுக்கும் அப்படி என்னதான் வேறுபாடு இருக்கிறது - செங்கொடியைத் தவிர?

● பாலன்

**தேர்தல் ஆணையத்தை எதிர்க்கத் துணிவில்லாத 'மார்க்சிஸ்டு' கட்சி, நூதனப் பிரச்சாரம் என்ற பெயரில் நடத்தும் கோமாளித்தனம்.**



Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHILPRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85
Regn. No: TN/CC(S)Dn/190/06-08
WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# இமயத்தில் உயர்கிறது செங்கொடி!



மோசடி நாடாளுமன்ற ஜனநாயகத்தைத் திரைகிழித்து ஆர்த்தெழுகிறது நேபாளம்!



மக்கள் கரங்களில் அதிகாரத்தைக் குவிக்கும்
புதிய ஜனநாயகத்துக்கான மக்கள் யுத்தம் தொடர்கிறது!

படிப்பகம்